விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 06 செவ்வாய்க்கிழமை (20.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

# நீதி கிடைக்காது தமிழர் நிர்க்கதி!

## ரவிகரனுக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் நிகழ்வின் எதிரொலியாக வடமாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் து.ரவிகரனை இன்று செவ்வாய்க் கிழமை 20 ஆம் திகதி சமுகமளிக் கும்படி முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 17 ஆம் திகதி முள்ளிவாய்க் காலில் மக்களுடன் சேர்ந்து அக வணக்கம் செலுத்திய நிலையில் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத் தினால் இவ் உத்தரவு விடப்பட் டுள்ளது.

நேற்று மாலை 5 மணியள வில் நீதிமன்றத்தில் இருந்து வந்த அறிவித்தலின்படி இன்று காலை 9 மணியளவில் நீதிமன்றத்தின் முன்பாக தவறாது சமுகமளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருப் பதாக அறியமுடிகிறது.

20 ஆம் பக்கம் பார்க்க....

## சுட்டிக்காட்டுகிறார் மிலிபாண்ட்



(லண்டன்)

முள்ளிவாய்க்கால் அனர்த் தத்தின்பின் ஐந்து வருடங்கள் கழிந்தும் இன்னமும் தமிழ் மக் களுக்கு உரிய நீதியும் பொறுப் புக் கூறலும் கிடைக்கவில்லை யென பிரித்தானிய தொழில் கட்சியின் தலைவர் எட் மிலி பாண்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## நம்பிக்கையிலா தீர்மானத்தால் ஆளும் கட்சிக்குள் குழப்பம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக் கிய தேசியக் கட்சி கொண்டு வந் துள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் காரணமாக அரசாங்கத்திற்குள் குழப பம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், இலங்கையை போதைப் பொருள் மத்திய நிலையமாக மாற்றி யுள்ளதாக குற்றம் சுமத்தி ஐக்கிய தேசியக் கட்சி இந்த நம்பிக்கை யில்லா தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது.

இதனால் அரசாங்கத்தின் கூட்ட ணிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட் டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆளும் கட்சியின் கூட்டணிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியன நமபிக்கையில்லா தீர்மானம் தொடர் பான விவாதத்தை தவிர்க்க தீர் மானித்துள்ளதுடன் இது தொடர் பில் அந்த கட்சிகளுக்குள் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

நம்பிக்கையில்லா தீர்மானத் திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். அத்துடன் தீர்மானத்திற்கு இணங்க

19 ஆம் பக்கம் பார்க்க....

## சிங்கள குடும்பங்கள் மன்னாரில் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)


வடக்கில் சிங்கள மக்களின் குடிப் பரம்பலை அதிகரிக்கும் நோக்கில் மன்னாரில் ஆயிரத்துக்கும் மேற் பட்ட சிங்களக் குடும்பங்களைப் புதி தாகக் குடியேற்றுவதற்கான நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்ப தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று திங் களன்று வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில், மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொண்டச்சி பாசித்தென்றல் பகுதி களில் கடறகரையோரமாக இந்தக் குடும்பங்களுக்கு என வீடுகள் அமைக் கப்பட்டு வருவதாக குறிப்பிட்டிருக் கின்றார்.

இது குறித்து, ஆளும் அரச ஆத ரவு கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முசலி

19 ஆம் பக்கம் பார்க்க....

## இசைப்பிரியாவுடனிருந்த பெண் அடையாளம் காணப்பட்டார்



(வன்னி)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இராணுவத்தினரால் சிறைபிடிக்கப்பட்ட இசைப்பிரியா மற்றும் இளம் பெண் ஆகியோர் உயிருடன் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகைப்படங் களினை நேற்றுமுன்தினம் கொழும்பு ரெலிக்கிறாவ் வெளியிட்டிருந்தது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## இசைப்பிரியாவின் புகைப்படங்களை இராணுவம் ஆய்வு செய்யும்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவில் கடமையாற்றிய இசைப்பிரியா இராணுவ காவல ரண் முன்னால் பிறிதொரு பெண் ஒருவருடன் உயிரோடு உள்ள புகைப்படங்கள் புதிதாக வெளியிடப பட்டுள்ள நிலையில் அவை தொடர பில் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என பாது காப்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுதுமட்டுவாழ் பகுதி யில் இருந்து இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலத்தை கொடிகாமம் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

முகமாலை இராணுவ முகா மைச் சேர்ந்த இரங்கிரிய, மெதக மவைச் சேர்ந்த எம்.கே.எஸ். நந்த பிரியந்த ருவன் (வயது - 50) என்ற சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஈழ அகதிகள் தொடர்பில் இரு நாட்டு அரசும் பேசும்

### யாழ். இந்திய துணைத்தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் மீண்டும் நாட்டுக்கு திரும்பிவருவது குறித்து இரண்டு நாட்டு அரசாங்கங்களும் பேசியே தீர்மானம் எடுக்கவேண்டும். அதே வேளை இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் நாட்டுக்கு திரும்பிவர தமது விருப்பத்தை முதலில் தெரிவிக்க வேண டும் என யாழ் இந்தியத் துணைத்தூது வர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

தென்னமெரிக்காவின் பிரிட் டிஷ் கயானாவிற்கு இந்தியத்ததூது வராக மாற்றலாகி செல்லவுள்ள யாழ். இந்திய துணைத்தூதுவர் மகாலிங் கத்தை ஊடகவியலாளர் சந்தித்து நேற்று முற்பகல் யாழிலுள்ள இந் தியத் துணைத்தூதரகத்தில் இடம் பெற்றது. இதன்போது ஊடகவிய லாளர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்வி யொன்றுக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவிலுள்ள ஈழ அகதிகள் தங்களது நாட்டுக்கு திரும்பிவர விருப்பம் தெரிவிக்கப்படுமிடத்தே அவர்களை அதுதொடர்பான நட வடிக்கைகளை மேற்கொள்ள முடி

20 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் அடுத்த அமர்விற்கு 13 பிரேரணைகள் முன்மொழிவு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் பாது காப்பு தேவைகளுக்கென இராணு வத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை மீளப்பெற்று அதன் உரி மையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 13 பிரேரணைகள் வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் விவா திக்கவென முன்மொழியப்பட்டுள் ளது.

நாளை மறுதினம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபையின் 9 ஆவது அமர்விலேயே 13 பிரேரணைகள் முன்மொழியப் பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள பிரே ரணைகளாவன, அவைத் தலைவர சீ.வீ.கே.சிவஞானம், கடந்த 2012 ஆம் ஆண்டு பட்டப்படிப்பினை நிறைவுசெய்த பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தைப்போன்று 2013 ஆம் ஆண்டு பட்டப்படிப்பினை நிறைவுசெய்த பட்ட தாரிகளுக்கும் நியமனம் வழங் கப்படவேண்டுமென அரச பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சினை இச்சபை கோருகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உதவிக் கணக்காளர்
- கணக்கு பதிவாளர்

தொடர்புகளுக்கு:-0772349933

(சி-7411)



## வீடு விற்பனைக்கு

முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு : 0770440082

(6424)



**ஹோட்டல் பிள்ளையார் இன்** இல் விசேடமாக தயாரிக்கப்பட்ட இந்திய சமையல் கலை வல்லுநர்களின் கை வண்ணத்தில்.

1. பூரி
2. சப்பாத்தி
3. ரவாதோசை
4. வெங்காய தோசை

100/= மட்டும்

(சி-7414)

இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7413)


## வீட்டினுள் நுழைந்து பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்தவர்கள் கோவிலுக்கு சென்ற நேரம் பார்த்து வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் சுமார் 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், துவிச்சக்கர வண்டியொன்றும், மற்றும் லாப்டாப் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களையும் திருடிக்கொண்டு சென்றுள்ளனர் என்று வீட்டின் உரிமையாளரினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இலக்கம் 160 நமசிவாயம் கணபதிப்பிள்ளை என்பவரின வீட்டிலேயே இந்த திருட்டுச் சம்பவம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கு மிடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

காரைநகர் சிவன் கோவிலுக்கு வழிபாட்டுக்காக சென்றுவிட்டு வீட்டுக்கு வந்து பார்த்தபோதே வீட்டிலிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளது தெரிய வந்ததாக வீட்டின் உரிமையாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(செ-6-246)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532



## மணிவிழா நாயகனே வாழி! வாழி!!



உயர்திரு.மு.வ.செல்வராசா
(மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வட மாகாணம்)

கல்விப் பணியை கருத்துடன் ஆற்றி
மாண்புறு சேவையில் மணிவிழா
கண்டீர்! உம்பணி தன்னை
உவப்புடன் ஏற்றே
கோப்பாய்க் கோட்டத்தார்
மனதார வாழ்த்துகின்றோம்.

அதிபர் சங்கம்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அலுவலகப் பணியாளர்கள்,
கோப்பாய்.

(சி-7418)



## கரம்பொன், அன்னை வேளாங்கண்ணி மாதா யாஸ்திரை தல திருவிழா



07/05/2014 அன்று மினிசூறாவளியினால் சேதமடைந்த கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயம் முற்றாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 22.05.2014 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செப மாலையும் தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய கொடி ஏற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகின்றது. 22-ம் திகதியிலிருந்து தினமும் மாலை 5 மணிக்கு திருச்செப மாலையும் தொடர்ந்து திருப்பவனியும் இடம்பெறும். 30.05.2014 வெள்ளிக்கிழமை நற்கருணை விழாவும் 31.05.2014 சனிக்கிழமை திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச்செப மாலையுடன் ஆரம்பமாகி அன்னையின் திருச்சொரூப பவனியுடன் திருவிழா இனிதே நிறைவடையும்.

அன்னையின் ஆசீர்பெற அன்போடு அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

(சி-7419)


# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

## FACULTY OF SCIENCE

Senior Professor / Professor of Zoology

## FACULTY OF MEDICINE

Para Medical Degree Programme - B.Sc Programme in Pharmacy

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer ( Prabationary) in Pharmacy

**Note:**

1.Applications will be entertained from the candidates who has first degree with specialization in Chemistry and postgraduate degree in pharmaceutical Chemistry/Natural product Chemistry for the post of Senior Lecturer and from the candidates who has degree with specialization in Chemistry for the post of Lecturer (Probationary)

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67100 – 11x1425 – 82775/- p.m |
| Professor | Rs.56505 – 13x1310 – 73535/- p.m |
| Senior Lecturer Gr. I | Rs.45545 – 7x1050 – 52895/- p.m |
| Senior Lecturer Gr. II | Rs.39755 – 11x790 – 48445/- p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/- p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid:

i. Academic allowance – Senior Professor/ Professor – 90% of the basic salary
Senior Lecturer Gr.I/Gr.II – 85% of the basic salary
Lecturer (Probationary) – 65% of the basic salary
ii. Special allowance - 20% of the basic salary
iii. Cost of living allowance of Rs.7,800/-p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii. Gratuity payments
iv. Employees' Trust Fund benefits.
v. Free Medical Services.

**Closing date:**

Post of Senior Professor/Professor - 18.08.2014
Other posts - 27.06.2014

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
19.05.2014

(C-7415)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள்

# கடனாளிகளானமைக்கு நாம் பொறுப்பாளிகளல்ல

## யாழ். இந்திய துணை தூதுவர் தெரிவிப்பு

இந்திய அரசாங்கம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர்களின் வதிவிட பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடனேயே 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்திருந்தது. ஆனால் இந்தியவீட்டுத்திட்டத்தினால் பயனாளிகள் கடனாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவருகின்றது. வீட்டுத்திட்டப்பயனாளிகள் கடனாளிகளாக மாற்றப்பட்டனர் என்பதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது என்று யாழ்.இந்தியத்துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் விளக்கமளித்துள்ளார்.



யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவராக கடந்த முன்று வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி தற்போது தென்னமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் கயானா நாட்டிற்கான இந்தியத் தூதுவராக மாற்றலாகிச் செல்லவுள்ளார். இந்நிலையில நேற்று யாழ்.இந்தியத்துணைத்தூதரகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்தமாதம் 12 ஆம் திகதி பிரிட்டிஷ் கயானாவிற்கான இந்தியத் தூதுவராக பதவியேற்கவுள்ளேன். யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவராக மூன்று வருடங்களுக்கு மேலாக கடமை ஆற்றியிருக்கின்றேன். இங்கு கடமையாற்றிய காலப் பகுதியில் பல்வேறு விடயங்களை அறிந்து வைத்திருப்பதுடன் பலரும் நண்பர்களாகியும் இருக்கின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு வந்த பின்னராகவே தமிழ் மொழி பேசுவதற்குக் கற்றுக் கொண்டேன். ஏனென்னில் இதற்கு முன்னராக இந்திய வெளிவிவகார அமைச்சில் கடமை ஆற்றிய காரணத்தினால் வெளிநாடுகளிலும் புதுடில்லியிலுமே இருந்து வந்துள்ளேன்.

இதனால் தமிழ் பேச முடியாதிருந்ததுடன் மேடைப் பேச்சுக்களிலும் கலந்து கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் யாழிலுள்ள தூதரகத்தின் தூதுவராக வந்ததன் பின்னராகவே தூய தமிழ் பேச கற்றுக் கொண்டதுடன்மேடைகளிலும் பேசி வருகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் தான் நான் தூய தமிழைக்கற்றுக்கொண்டேன் எனக்கூறமுடியும்.

நான் இங்கு வந்த போதிருந்த நிலைகளிற்கும் தற்போதுள்ள நிலைமைகளிற்கும் இடையில் பாரிய மாற்றங்கள் உண்டு.

குறிப்பாக பொருளாதார மற்றும் வாழ்வாதார ரீதியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது

இங்கு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பிரதேசங்களில் கடமையாற்றியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இக் காலப் பகுதியில் பல்வேறு சேவைகளை தொடர்ந்து முன்னெடுத்திருந்த அதே வேளையில் தற்போதும் பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இந்த மக்களிற்கென்று தனித்துவமான பல சிறப்புக்கள் இருக்கின்றன. இதிலும் கலை, கலாசார ரீதியாக பல்வேறு சிறப்புக்கள் இருக்கின்றன.

அதாவது இங்குள்ள மக்களின் கலாசாரம் தனித்துவமானது என்பதுடன் கலை மீதும் அதிக ஆர்வம் உடையவர்களாகவே இருக்கின்றனர்.

இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள மக்களிற்கும் இங்குள்ள மக்களிற்கும் இடையில் கலை, கலாசார, பாரம்பரிய பண்பாடுகளினூடாக பாரியளவிலான வித்தியாசம் உண்டு. இதற்கமைய இரு தரப்பினர்களும் அதனைப் பின்பற்றி வருவதுடன் பேணியும் வருகின்றனர்.

இந்த மக்களின் கலை, கலாசாரங்களை மதிக்கின்றோம். அதனைப் பின்பற்றியும் இருக்கின்றோம்.

இவ்வாறு இங்கு கிடைத்த நட்புகள், ஆதரவுகள் ஒத்துழைப்புக்களை என்றும் மறக்க மாட்டேன்.

இதே போன்று நான் மாற்றலாகிச் செல்கின்ற கயானா நாட்டிலும் 50 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்திய வம்சாவளி மக்கள் இருக்கின்றனர். இதனால் இங்கு ஏற்பட்டுள்ள அனுபவங்கள் அந்த நாட்டில்செயற்படுவதற்கு உறுதுணையாகவே இருக்குமென்று நம்புகின்றேன்.

மேலும், இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு விஜயம் செய்த போது இந்தியப்பிரதமருடன் சந்தித்து கலந்துரையாடியதன் பிரகாரம் இந்திய அரசாங்கத்தினால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்தது. அதன்படி ஆயிரக்கணக்கான வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் வடக்கில் அமைக்கப்பட்டு வரும் இந்திய வீடுகளினால் அதற்கு பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள் கடனாளிகளாக மாறிவருகின்றனர் என்று குறை கூறப்படுகின்றது.

நாம் ஒன்றும் பயனாளிகளை வேண்டுமென்று கடனாளிகளாக மாற்றவில்லை. அவர்களாகவே கடனாளர்களாக மாறிவருகின்றனர்.

550 சதுர அடி வீடுகளை அமைக்கவே 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை ஒரு வீட்டை அமைக்க பயனாளி ஒருவருக்கு வழங்கப்படுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களில் 40 வீதமானவர்கள் 750 சதுர அடி வீட்டை அமைத்து வருகின்றனர்.

இதனால் கடனாளிகளாக அவர்கள மாற்றப்பட்டு வருகின்றனர். இதற்கு நாம் பொறுப்பேற்க முடியாது என்று அவர் விளக்கமளித்துள்ளார். (2-6)

## அனல்மின் நிலையத்தில் தொழில்நுட்ப பிரச்சினை

(கொழும்பு)

தொடர்ந்தும் தொழில்நுட்ப பிரச்சினை யால் பாதிக்கப்பட்டு வரும் நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தில் மற்றும் ஒரு தொழில்நுட்ப பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

300 மெகாவோட்ஸ் உற்பத்தி திறனைக் கொண்ட இந்நிலையத்தில் சூடாக்கியில் ஏற்பட்டுள்ள கசிவு காரணமாக இப் பிரச் சினை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப பிரசசினை கடந்த ஜனவரி 25 ஆம் திகதிக்கு பின்னர் இரண்டாவது தடவையாக ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து திருத்தும் பணிகள் சீன மெக்கானிக்கல் எஞ்சினியரிங் கோப் பரேசனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்சார நிலையம் சீனாவின் அனுசரணையுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## பாரதீய ஜனதா கட்சியின் வெற்றி இலங்கைக்கு முக்கியமானது

### அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

இந்திய பொதுத் தேர்தலில் நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியின் வெற்றி இலங்கைக்கு முக்கியமானது என அரசாங்கம் கருத்து வெளியிட்டுள்ளது.

மாநில அரசாங்கங்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாது சுயமாக தீர்மானங்களை எடுக்க்கூடிய ஓர் மத்திய அரசாங்கம் இந்தியாவில் உருவாகியுள்ளது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உறுதியான ஆட்சி நிறுவப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநில அரசாங்கங்களின் அழுத்தங்களை எதிர்நோக்க வேண்டிய அவசியம்மோடிஅரசாங்கத்திற்கு இருக்காது.

நரேந்திரமோடிக்கு ஜெயலலிதா போன்றோரின் ஆதரவு தேவையெனில் இலங்கை விடயத்தில் இந்திய மத்திய அரசு அழுத்தங்களை எதிர்கொள்ளும்.



ஆனால் பாரதீய ஜனதா பெரும்பான்மை பெற்று ஆட்சியமைப்பதால் இத்தகைய அழுத்தங்களுக்கு அடிபணியத் தேவையில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## இராசி பலன்

**20.05.2014**

**(வைகாசி 06, செவ்வாய்க்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**

**சஷ்டி பிற்பகல் 1.11 மணிவரை**

**திருவோணம் முன்னிரவு 11.31 மணிவரை**

**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**

**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**

வளவன்

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் அதிகரித்து வளம் காண்பீர்கள், உறவினர் சந்திப்பால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மேடம்** தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்து இணைவர், எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பிறர் உதவியுண்டு.

**இடபம்** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மனக்குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடி கொள்ளும், வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள்.

**மிதுனம்** பேச்சில் நிதானம் தேவை, தேக நலனில் அதிக கவனம் எடுக்கும் சூழ்நிலை உருவாகலாம், பிரயாண பயமுண்டு, வேலைச்சுமை கூடும், சஞ்சலங்கள் கூடும்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், உறவினர் விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளை தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கடகம்** உங்களின் கருத்துக்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும், அபூர்வ சந்திப்புண்டு, தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** சயன சுகமுண்டு, பெரியோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், ஜன வசியமுண்டு, பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்** பழைய கடன்களை வசூலிக்கும் எண்ணம் உருவாகும், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நோய்கள் குணமடையும்.

**தனுசு** அரசியல் ஈடுபாடு கூடும், பொருளாதார நலன் கருதி சில முடிவுகள் எடுப்பீர்கள், இல்லத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும், கல்வியில் ஆர்வம் கூடும், மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், காரிய செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளால் ஏற்படும் செலவுகளை குறைக்கும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவி செய்வதில் பிரியப்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடந்த நிலையில் க.தொ.கூட்டுறவு சங்கங்கள்

## புதுப்பிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்றொழிலாளர்கள், கடற்றொழில் கூட்டுறவு சங்கங்கள் அதன் ஆட்சிக் காலம் முடிவடைந்த நிலையில் இன்னும் புதுப்பிக்கப்படாது காணப்படுவதாக அப்பிரதேச கடற்றொழில்லாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்களின் சமாதானத்திற்கு கீழுள்ள மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கரையோர கிராமங்களில் 15 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கூட்டுறவுசங்கங்கள்உள்ளன.

கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தை நிர்வகிப்பதற்கு பொதுச் சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற நிர்வாகம் இரண்டு வருடங்கள் மட்டும் நிர்வகிக்கும். இவ்வாறு ஒவ்வொரு சங்கத்திற்கும் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை புதிதாக நிர்வாகம் தெரிவுசெய்யப்படுவது வழமையானது. ஆனால் தற்போது சில கடற்றொழிலாளர் சங்கங்கள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பல சங்கங்கள் இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் புதிய நிர்வாகத் தெரிவுகள் இன்னும் இடம் பெறாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் குறித்த சங்கங்கள் இயங்காத நிலையில் உள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே காலம் கடந்த நிலையில் இருக்கும் சங்கங்கள் அனைத்தையும் புதுப்பித்து சீரான நிர்வாகங்களை ஏற்படுத்தி கடற் றொழிலாளர்களுக்கு நேர்த்தியான சேவையை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-64)



நன்றி-மிரர்

# பேச்சு போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் திருஞான சம்பந்தர் குரு பூசையை முன்னிட்டு நடத்தப்படவுள்ள பேச்சுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மேற்படி கழகத்தின் உதவிப்பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இப்பேச்சுப் போட்டி தரம் 1,2, மாணவர்களுக்கு முறையே திருஞானசம்பந்தர், சம்பந்தப் பெருமான் இறையருள் பெற்றமை என்னும் விடயத்திலும் தரம் 3,4 ஐ சேர்ந்த மாணவர்களுக்கு ஞானக் குழந்தையின் முத்திப்பேறு என்னும் விடயத்திலும்பேச்சு இடம்பெறும்.


இப்பேச்சு போட்டிகள் எதிர்வரும் யூன் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.வண்.நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் யூன் மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருஞானசம்பந்தர் குருபூசைத் தினத்தன்று நடைபெறும்.

மேலும் இப்போட்டிக்கான கட்டணமாக ஐம்பது ரூபாவைச் செலுத்தி விண்ணப்படிவங்களைஇல-82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சைவ அபிவிருத்தி கழக அறிவகத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை தபாலிலோ அல்லது நேரிலோ கையளிக்கும் படி அவர் கேட்டுள்ளார்.(2)

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



மாதனை பருத்தித்துறையை நிரந்தர வதிவிடமாகக் கொண்டகணநாதன் என்பவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவாணக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் மற்றும் பருத்தித் துறை நகராட்சி மன்ற அபிவிருத்தி ஆலோசனைகுழு உறுப்பினருமாவார். (2-19)

# பருத்தித்துறையில் வீதிகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினரால் எட்டு வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இந்த மன்றத்தின் சபை நிதியிலிருந்து இவ் வீதிகள் புனர மைப்புச் செய்யப் படவுள்ளன.

இதில் மூன்று வீதிகள் கொங்கிறீட் வீதிகளாகவும் ஏனையவை தார் வீதிகளாகவும் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதன் படி தெருவட்டி மணல் ஒழுங்கை,வக்க மோடை ஒழுங்கை என்பன கொங்கிறீட் இடப்படவுள்ளதுடன் மேற்படி சபையின் அலுவலகத்திற்கு முன்பாகவும் கொங்கிறீட் இடப்படவுள்ளது.

அத்துடன் முனீஸ்வரர் கோவில் வீதி, கடற்கரை வீதி, சந்தைமேற்கு வீதி, தாழ்வு கலட்டி வீதி, சென் அன்ரனீஸ் வீதி ஆகிய ஐந்து வீதிகளுக்கு தாரிடப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் சபா ரவீந்திரன் மேற்கொண்டுள்ளார். (அ-10)

# வரண்டுள்ளது தொண்டைமானாறு நீரேரி; பாலத்தின் கதவுகளை திறவுங்கள்

## மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக தொண்டைமானாறு கடல் நீர் முற்றாக வற்றி வரண்டுள்ளதாக வடமராட்சி பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொண்டைமானாறு கடல்நீரேரி புயலுக்கு முன்பு அமைதி நிலவுவது போல் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் குறித்த பிரதேசத்தில் புயல் ஏற்படலாம் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தொண்டைமானாறு கடற்கரையோரமாக உள்ள கல்லுவம் மண்டான், சோளங்கன், முதலைக்குளி, கரவெட்டிஆகிய கிராமங்களில்உள்ள மக்களே தெரிவித்துள்ளனர்.

குறித்த தொண்டைமானாறு கடல் நீரேரியானது வரட்சியின் காரணமாக நீர் வற்றி வறண்ட நிலையில் காணப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் கடலின் உப்புச் செறிந்த மண்ணானது காற்று மற்றும் மழைகாலங்களில் மேற் குறித்த கிராமங்களை நோக்கி அடித்து செல்லும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் வீடுகள், கட்டடங்கள், விவசாய விளைநிலங்கள் மற்றும் உடு புடைவைகள் என்பவற்றில் இவ் உப்பு மண் படியக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

இதனால் விவசாய நிலங்கள் உலர் நிலங்களாக மாறுவதுடன் நன்னீர் நிலைகள் உலர் நீர் நிலையாக மாறக் கூடிய சந்தர்ப்பம் உருவாக கூடும்.

இது போன்ற சந்தர்ப்பங்களில் குழந்தைகள் முதல் சுவாச நோய் உள்ளோர் வரை பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படலாம் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறான அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் இப்பிரதேச பிரதான பாலத்தின் கதவைத் திறந்து குறித்ததொண்டைமானாறு கடல் நீரேரிக்கு நீரை இறைத்தலே சிறந்தது எனவும் இதனால்அப்பிரதேசநீர்வளம், மண் வளம் மற்றும் மனித வாழ்வாதாரங்களை பாதுகாக்க முடியும் என அப்பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

# பனங்காய்க்குளம் உள்ளிட்ட வாய்க்காலை புனரமையுங்கள்

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு- மறவன் புலோ விவசாய கமக்கார எல்லையாக அமைந்துள்ள பனங்காய்க்குளம் அதனுடன் இணைந்த வாய்க்கால் என்பன இருபது வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெரும்போக நெற்செய்கையின் போது மேலதிக நீரை அப்புறப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் ஒவ்வொரு வருடமும் நெற்செய்கை அழிவடைந்து விடுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆண்டு தோறும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டும் புனரமைப்பு வேலைகள் இதுவரை காலமும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இவ்வருடமும் பெரும் போக பயிர்ச்செய்கையினை ஆரம்பிப்பதற்கு இக்குளத்தையும் அதனோடு சேர்ந்த வாய்க்காலையும் புனரமைப்பு செய்து தருமாறு அப் பிரதேச விவசாயிகள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-37)





# கட்டட வேலைகள் பூர்த்தியாகின

யாழ்.பிரதேச செயலகத்தின் புதிதாக அமைக்கப்பட்ட கட்டட வேலை கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அடுத்த மாதம் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெறவுள்ளதாக, யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.கலாசார பேரவையின் நிர்வாக சபைக்கூட்டம் கடந்த 16ஆம் திகதி யாழ்.பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தை தலைமையேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நாற்பதுக்கு மேற்பட்ட கலைஞர்களை உள்ளடக்கியதாக அவர்களின் விபரங்களை ஆவணப்படுத்தும் ஆவண நூல் வெளியீடும் திறப்பு விழாவின்போது இடம் பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-51)



புங்குடுதீவு சவேரியார் ஆலய பங்கில் யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குடும்பம் என்ற வடிவில் தெருவொலி ஆற்றுகை அண்மையில் இடம் பெற்றது. இதன் போது ஆற்றுகையின் ஒரு பகுதியினையும் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர் என கூறிக்கொண்டு வாழ்ந்த இந்தியர் கைதானார்

தன்னை ஒரு இலங்கையர் எனக் கூறிக் கொண்டு 19 வருட காலமாக அநுராத புரத்தில் வசித்து வந்த இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இவரிடமிருந்து பல ஆவணாங் கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன. இந்த ஆவணங்கள் வெவ் வேறு நாடுகளில் வைத்து அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்தே இவர் தங்கியிருந்த இடத்தை பொலி ஸார் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினார்கள்.

இதன்போது அவர் கைது செய்யப்பட்ட துடன், அவரிடமிருந்த ஆவணங்கள் பல வும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

குறித்த நபர் தன்னுடைய பெயரை மாற்றி வைத்துக்கொண்டு அநு ராதபுரத்தில் வசித்து வந்தார்.

அடிக்கடி வடபகுதிக்குச் சென்று வருவ தாகவும் விசாரணைகளின் போது தெரிய வந்திருக்கின்றது. கைது செய்யப்பட்ட நபர் இந்தியப் புலனாய்வு நிறுவனம் ஒன்றுக்காக பணிபுரிபவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள் ளார்கள்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட அடை யாள அட்டையின் படி 44 வயதான இவர் போலியான கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்திருப் பதும் தெரியவந்திருக்கின்றது.

தன்னுடைய கடவுச்சீட்டு அழிந்து வட்ட தாகக் கூறி இலங்கைக் கடவுச் சீட்டு ஒன்றை யும் இவர் பெற்றி ருப்பதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக் கின் றது.

1995 ஆம் ஆண்டில் கேரளாவிலிருந்து தான் இலங்கைக்கு வந்ததாக விசாரணை யின் போது தெரிவித்த இவர், அநுராதபுரத் திலும் வவுனியாவிலும் ஹொட்டல்களில் தொழில் பார்த்ததாகவும் கூறி யிருக்கின்றார்.

இவரிடமிருந்து போலி அடையாள அட் டைகள் உட்பட பல ஆவணங்கள் கைப்பற் றப்பட்டுள்ளன. (2)


## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: 5
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: தொழில்நுட்ப கல்லூரி / விவசாயம்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/3153

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 30 செவ் 4 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc Computer Science / பொறியியலாளர்
தொ.இ: B/3154

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 8.5
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L / Quantity Surveyor
தொ.இ: B/3155

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 20.75
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L / அலுமினிய பிற்றிங்
தொ.இ: B/3158

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 22.5 செவ் 4 இல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/3156

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 58 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.Com./ Computer work (இந்தியா)
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3157

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: 42.5 சூரி செவ் 11 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: திருமணமானவரும் ஏற்றுக கொள்ளப்படும்.
தொ.இ: G/3162

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 33.75சூரி செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3167

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...
அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)




தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜீ) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.
(6390) T.P.0777064247

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## சுகவாழ்வுக்கான பயணம்
"தலையாரி"
இனப்பெருக்க, பாலியல் சுகாதாரம் தொடர்பான கல்வி, தகவல் ஆலோசனை மையம்.
"இனப்பெருக்க பாலியல் சுகாதாரம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளுக்கும் கொலையோ, தற்கொலையோ தீர்வல்ல."
இனப்பெருக்க பாலியல் சுகாதார ரீதியான பிரச்சினைகள் இருப்பதாக உணர்கிறீர்களா? எம்முடன் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகளைப் பெற்று ஆரோக்கியமான வாழ்வைத் தொடரலாம். உங்கள் இரகசியங்களை நாம் பாதுகாப்போம்.
T.P:- 021 221 7557
021 307 4618
Email :- crshjfhl@gmail.com (சி-7309)
அன்னசத்திரலேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் ஊடாக அண்மையில் கொழும்பில் (பிலியந்தல) இடம்பெற்ற நிகழ்வொன்றில் அறக்கொடையின் ஸ்தாபகர் **திரு.வாமதேவா தியாகேந்திரன்** அவர்களின் நிதிப் பங்களிப்புடன் சுமார் 150 இற்கும் மேற்பட்ட வறிய மாணவ, மாணவிகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக தொழில் அமைச்சர் கௌரவ **காமினி லொக்குகே** அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

(C-7416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வில் அரசு கவனம் செலுத்தவேண்டும்

## கனடா தூதர் ஷெல்லி வைட்டிங்

இலங்கையில் நடைபெற்ற வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்காத நாடுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விமர்சித்துள்ளார்.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு மே 18 இல் நடைபெற்ற இறு திக்கட்டப் போரில் விடுதலைப் புலிகளை அந்நாட்டு இராணுவம் வீழ்த்தயது. இந்த நாளை ஆண்டு தோறும் வெற்றி தினமாக அரசு கொண்டாடி வருகிறது.

இதில் பங்கேற்குமாறு இலங்கையில் உள்ள பல்வேறு நாடுகளின் தூதர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. எனினும், கனடா உள்ளிட்ட பல்வேறு மேற்கத்தேய நாடுகளின் தூதர்கள் வெற்றி தினக் கொண்டாட்டத்தைப் புறக்கணித்தனர்.

இது குறித்து கனடா தூதர் ஷெல்லி வைட்டிங் கூறுகையில்,

வெற்றி தின அணிவகுப்பை இராணுவம் தற்போது நடத்துவது பொருத்தமற்றது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் தான் இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது சொந்த ஊரான மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெற்றி தின அணிவகுப்பில் கலந்து கொண்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்

சில நாட்டு அரசுகள் குருடாகவும், செவிடாகவும் ஊமையாகவும் உள்ளன. நாம் இந்த வெற்றியைக் கொண்டாடுவதை அவை எதிர்க்கின்றன. இந்த நாளை நாம் கொண்டாடக கூடாது என்று சில தரப்பில் கூறப்பட்டாலும், இதைக் கொண்டாடுவதில் நான் உறுதியுடன் இருக்கிறேன்.

நாம் அமைதியின் வெற்றியைத்தான் கொண்டாடுகிறோமே தவிர, போரின் வெற்றியை அல்ல. போரில் வீரம் காட்டிய கதாநாயகர்களுகக மரியாதை செலுத்த சிறந்த வழி, அமைதியைப் பராமரிப்பதுதான்.

மிகப்பெரிய உயிர்த்தியாகங்களால் சாதிக்கப்பட்ட அமைதியைக் காக்க உறுதியேற்போம் என்று தெரிவித்தார். (2)


# ஐ.நா.விசாரணைக்கு பதிலளிக்க பாகிஸ்தான் சட்டத்தரணி

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை விசாரணைகளுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் பாகிஸ்தான் சட்டத்தரணியை நியமிக்கத் திட்டமிட்டுள்ளது. 70 வயதான அட்டிஸாஸ் அஷேன் என்ற சட்டத்தரணியே இவ்வாறு இலங்கையின் சார்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் வாதிடவுள்ளார்.

சட்டத்தரணி அஷேன் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சட்ட உதவிகளை வழங்குமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பீடம் கோரிக்கை விடுத்திருந்தாகக் குறிப்பிடப்படுகிறது. 1999ஆம் ஆண்டில முனனாள் பாகிஸ்தான் பிரதமர் பர்வேஸ் முசாரப்பின் விமானத்தை கடத்த முயற்சித்ததாக தற்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது குற்றம் சுமத்தப்பட்ட போது அவருக்காக சட்டத்தரணி அஷேன் வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 130 | 100 |
| தக்காளி | 140 | 140 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 80 | 80 |
| கரட் | 90 | 80 | 100 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 20 | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100-120 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 160 | 130 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 40 | 60 | 60 |
| பயற்றங்காய் | 30 | 60 | 50 | 50 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 80 |
| கறிமிளகாய் | 70 | 80 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 90 | 60 |
| போஞ்சி | — | 180 | — | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 90 | — | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 140 | 140 | 130 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 30-40 | 20-30 |
| இராசவள்ளி | 80 | 120 | 90 | 80 |



கந்தர்மடம் ஞான வைரவர் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## தபாலில் கடிதம் அனுப்புவதில் 90 வீத வீழ்ச்சி


தபால்மூலம் கடிதங்கள் அனுப்பப்படுவது 90 வீதமாகக் குறைந்துள்ளது. வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்கள் சாதாரண கடிதங்களைப் பார்க்கினும் மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளன.

வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்களுக்கு கூடுதல் கட்டணம் அறவிடப்படுவதால் வருமானமும் அதிகரித்துள்ளது. கையடக்கத் தொலைபேசி பாவனை அதிகரித்தமை, மின அஞ்சல் அத்திகமாகப் பயன்படுத்தல் காரணமாக கடிதப் போக்குவரத்துக்கள் குறைந்துள்ளன.


பரீட்சை விண்ணப்பங்கள், தொழில விண்ணப்பங்கள் போன்ற கடமைப் பணிகளுக்காக மட்டும் தபால்கள் பயன்படுத்தப்படுகின்றன. (2)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 19

### ராதாகிருஸ்ணன் நிவேதா




### தருண் திலக்




### அகிலன் துசாரா




### ஜெயக்குமார் அர்வின்




### அமலன் ரவி



### கீர்த்தி கீர்த்தனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri .16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் வெளியீடுகளுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.

# அரசாங்கத்தின் பிழைகளை மக்கள் முன்பாக வெளிப்படுத்துவது தவறு

## பிரதி சபா நாயகர் தெரிவிப்பு

**(கொழும்பு) அரசாங்கத்தில் குறைகள் இல்லாமல் இல்லை, ஆளும் கட்சியில் சில பிழைகள் காணப்படுகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை. எனினும், அரசாங்கத்தின் பிழைகளை அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக் காட்டி வரும் விதம் பிழையானது என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.**

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கத்தின் பிழைகளை அமைச்சரவைக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

மக்கள் முன் சென்று அரசாங்கத்தின் பிழைகளை வெளிப்படுத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நூற்றுக்கு நூறு வீதம் சரியானது என குறிப்பிட முடியாது. சில வேளைகளில் பிழைகள் இருக்கலாம். அவ்வாறு பிழைகள் இருந்தால் அது குறித்து சுட்டிக்காட்டி அவற்றை பேச்சு வார்த்தைகளின் மூலம் திருத்திக்கொள்ள முடியும்.

சுதந்திரத்தின் பின்னர் இந்த அரசாங்கத்தின் கீழேயே பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ச தனது பிரபல்யத்தை தக்க வைத்துக் கொள்ள இவ்வாறான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் புத்தி சாலித்தனமாக அதனை அணுக வேண்டும்.

விமல் வீரவன்சவும் ஜனாதிபதியும் நடிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. எனினும், நடிக்க வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு கிடையாது. விமல் வீரவன்ச ஆளும் கட்சியிலிருந்து விலகுவார் என எதிர்பார்க்கவில்லை என்றார். (2)

## பெண்ணை துன்புறுத்த முயன்ற பொலிஸ் கைது

(கொழும்பு)

ஜப்பானிய பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயற்சித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா, நல்லதண்ணீர் பிரதேசத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நல்லதண்ணீர் பொலிஸார் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செய்து, ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த பெண்ணையே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் துன்புறுத்த முயற்சித்துள்ளார். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைக்க உப குழு நியமனம்

2015ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாட்டுக்கான அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இக்குழு செயற்படவுள்ளது.

குறித்த அமைச்சரவை உப குழு முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் அறிக்கை சமர்ப்பிப்பர் என்றும் அந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைவாக கல்வி அமைச்சு மேலதிக நடவடிக்கை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாக அமைச்சரவை உபகுழுவினால் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (2)



வெசாக் தினத்தை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் செயலகத்தின் அனுசரணையில் யாழ்.திருநெல்வேலி சைவ வித்தியா விருத்தி இல் லத்தில் வாழும் சிறுவர்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஆளுநர்புதிதாக அமைக்கப்பட்ட விடுதியையும் பார்வையிட்டார். (படம் :- என்.குமார்)

## சிறுவர்கள் துன்புறுத்தல்கள் இலங்கையில் அதிகரிப்பு

### மனிதவுரிமை ஆணைக்குழு தகவல்

இலங்கையில் சிறுவர்கள் மீதான துன்புறுத்தல் தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாடசாலை ஆசிரியர்களினால் மாணவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், துன்புறுத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும், இந்த நிலைமை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையல்ல என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது சுட்டிக் காட்டியுள்ளது. (2)

## ஐ.தே.கட்சி தலைமைத்துவ சபை அடுத்தவாரம் கூடுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை அடுத்து வாரம் கூடவுள்ளது.

தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பியதும் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்போது ஊவா மாகாண சபைத் தேர்தல் குறித்தும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தற்போது முன்மொழியப்பட்டுள்ள பொது வேட்பாளர்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் தேரதல் காலங்களில் மக்களுக்கு தெளிவான கொளகை விளக்கம் ஒன்றை முன்வைப்பது தொடர்பில் ஐ.தே.க ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பில் கட்சிக்குள் தற்போது பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

எதிர்வரும் ஆறு மாதங்களில் இந்த கொள்கை அறிக்கை தயாரிக்க எதிர்பார்த்துள்ளதாக ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (2)

## அரசு இலவச கல்வியை இல்லாதொழிக்கின்றது

### சோசலிச மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

அரசாங்கம் இலவசக் கல்வியை இல்லாதொழித்து வருவதாக ஜே.வி.பி.யின் ஆதரவு அமைப்பான சோசலிச மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தனியார் பட்டக் கல்வியை மேம்படுத்தி வரும் அதேவேளை, அரசாங்கம் இலவசக் கல்வியை முடக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

கொதலாவல மற்றும் திறந்த பல்கலைக் கழகங்களின் பட்டப் படிப்புக்களுக்கும் பணம் அறவீடு செய்யப்படுவதனால் அவற்றை ஊக்குவிக்கும் அரசாங்கம், அரசாங்க பல்கலைக்கழகங்களின் பட்டக் கல்விகளை உதாசீனம் செய்து வருவதாக சோசலிச மாணவர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தை அமைக்க பத்து ஆண்டுகள் வரையில் நடவடிக்கை எடுக்காத அரசாங்கம், தற்போது பல்கலைக்கழகத்தில் பெரும் பொருட்செலவில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (2)

நிரந்தர தொழில்வாய்ப்பு

வருமானம் பிரச்சினையா??? தீர்க்க இதோ அரிய சந்தர்ப்பம் எம்மோடு இணையுங்கள் உடனடி நிரந்த தொழில் வாய்ப்பு. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ கோடியல்/ நூடில்ஸ்/ கிளவுஸ்/ Paint/Pvc... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ களஞ்சியப் பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் தொழில் அடிப்படையில் முதல் மாதம் 18000/=, 22000/= 02ம், 03ம் மாதம் 28000/=,32000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள்+ குழுக்கள்+ தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில்) வருகை அன்றே வேலை வாய்ப்பு.

(சி-7388) தொடர்புக்கு- 077 5561883

## குடிநீர் கேட்டு ஆர்ப்பாட்டம்

தலவாக்கலை தோட்ட மக்கள் நேற்று காலை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர் வடிகால் அமைப்பு சபையினால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக முறையான குடிநீர் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து தலவாக்கலை தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

200இற்கும் மேற்பட்ட தலவாக்கலை தோட்ட மக்கள் தலவாக்கலை மேல்கொத்மலை காரியாலத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர். (2)

## சிங்கள மொழியில் ஆபாச இணையத்தளங்கள்

சிங்கள மொழியிலான ஆபாச தகவல்கள் அடங்கிய இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் என 60 ஆயிரம் இணையத் தளங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சிங்கள தேடு தளத்தில் இவ்வாறான 59 ஆயிரம் இணையத்தளங்கள் பற்றி தகவல்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

பாடசாலை மாணவ, மாணவிகளை இலக்கு வைத்தே இந்த இணையத்தளங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (2)

## சீனா சென்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனா சென்றுள்ளார்.

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி நேற்று இரவு சீனா சென்றுள்ளார்.

ஆசியாவில் தகவல் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் மாநாட்டில் பங்கேற்கவே ஜனாதிபதி சீனா சென்றுள்ளார்.

24 அங்கத்துவ நாடுகளை கொண்டு இந்த மாநாடு இன்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை மறுதினம் வரை சங்காயில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் அமெரிக்கா உட்பட 9 நாடுகள் பார்வையாளர்களாக பங்கேற்கவுள்ளன.

ஆசிய நாட்டு மக்களின் சமாதானம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

809



# கண்ணாடிப் புலி



ராம்லால் முகம் பார்க்கும் கண்ணாடிகளை விற்பனை செய்பவன். அவனுக்கு சொந்தமாகக் கடை இல்லை. பெரிய கண்ணாடிக் கடைகளிலிருந்து வாங்கி வந்து கிராமங்களில் விற்பான்.

ஒருமுறை அவன், காட்டு வழியாக ஒரு கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தான். அந்தக் காட்டில் 18 புலிகள் நடமாடுவதாகப் பேச்சு உண்டு. காட்டில் சற்று தூரம் வந்ததும் புலியின் உறுமல் சத்தம் கேட்டது.

ராம்லால் திடுக்கிட்டு, சத்தம் வந்த திசையைக் கவனித்தான். சற்றுத் தொலைவில் ஓர் அடர்ந்த புதர். அதன் நடுவில் ஒரு புலி. அதன் கண்கள் தகதக எனச் சிவந்து மின்னின. வேட்டைக்காரர்கள் அதற்குக் கொள்ளிக்கண் என்று பெயர் வைத்து இருந்தனர்.

கொள்ளிக்கண் புலி, ராம்லால் மீது பாயத் தயாரானது. ராம்லால் மூளை சுறுசுறுப்பானது. அவன் ஜோல்னாப் பையில் இருந்த கண்ணாடிகளில் மிகப் பெரிய கண்ணாடியை எடுத்துப் புலியை நோக்கி நீட்டினான். "வாடா கொள்ளி! உன்னை மாதிரியே ஒரு புலியைப் பிடிச்சு இதில் அடைச்சு இருக்கேன். உன்னையும் பிடிச்சு சர்க்கஸ்காரனுக்கு வித்திடுறேன்" என்று கூச்சலிட்டான்.

கண்ணாடியில் உள்ள புலியைக் கொள்ளிக்கண் கவனித்தது. மனிதர்கள், புலிகளைப் பிடிப்பதைக் கொள்ளிக்கண் பார்த்து இருக்கிறது. "இவனும் புலி பிடிக்கறவன் என்று நினைத்து, வாலைச் சுருட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்தது.

அது மற்ற புலிகளையும் சந்தித்து, புலி பிடிப்பவன் வந்துள்ளதாக எச்சரித்தது. அவனிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப் புலிகள் திட்டமிட்டன.

அன்று இரவு, காட்டு விலங்குகளுக்காக அஞ்சி ராம்லால் ஓர் ஆலமரத்தில் ஏறி, ஒரு பெரிய கிளையில் சாய்ந்து கொண்டான். திடீரென்று பல இடிகள் இடிப்பதுபோல் கீழே சப்தம் கேட்டது.

ராம்லால் இலைகளை விலக்கிக் கீழே பார்த்தான். அவனுக்கு மூச்சு நின்றுவிடும்போல் தோன்றியது. கீழே வட்ட வரிசையாகப் புலிகள். அந்த மரத்தின் கீழ்தான் புலிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. மங்கிய நிலவு ஒளியில் ராம்லால் அவற்றை எண்ணிப் பார்த்தான். 18 புலிகள் உறுமியபடியும், முகத்தைத் தேய்த்தபடியும், வாலைச் சுழற்றியபடியும் சுற்றிச் சுற்றி வந்தன.

கொள்ளிக்கண் அன்று பகல் தனக்கு ஏற்பட்ட பயங்கரமான அனுபவத்தை நடுக்கத்துடன் விவரித்தது. "நான் அவனிடமிருந்து தப்பியது மகா அதிசயம்" என்றது.

அதைக் கேட்டு மற்ற புலிகள் உடலைச் சிலுப்பிக்கொண்டன. கூட்டத்திற்குத் தலைமை வகித்த கிழட்டுப் புலி "நீ பார்த்த புலி உன்னைப் பார்த்து உறுமியதா?" என்று கேட்டது.

"இல்லை. என்னைப் பார்த்தபடியே இருந்தது." என்றது கொள்ளிக்கண் புலி.

"அப்படி வா வழிக்கு. அது வெறும் பொம்மைப் புலி. நம்ம உடம்பில் எவ்வளவு சதை இருக்கு. நம்மை ஒரு சின்ன சட்டத்தில் அடைச்சுட முடியுமா? அப்படி சுருங்குறதுக்கு நம்ம உடம்பு என்ன பஞ்சு மிட்டாயா?" என்றது.

அப்போது இடைமறித்து இன்னொரு புலி "தாத்தா, மனித வாடை அடிக்குது. பேச்சை நிறுத்திட்டு மோப்பம் பிடிங்க. இந்த மரத்தின் மேலேயிருந்துதான் வாடை வருது. புலி பிடிக்க வந்த மனுசன் இந்த மரத்து மேலதான் இருக்கணும்" என்றது.

கிழட்டுப் புலி ஆமோதித்தது. அது மற்ற புலிகளிடம் "நாம் ராத்திரி பூரா இங்கேயே டேரா போடுவோம். அவன் எப்படியும் காலையில் மரத்தைவிட்டு இறங்கி வருவான். அப்போ அவனை பிடிச்சு காலை ஆகாரமா சாப்பிடலாம்" என்றது.

கிழட்டுப் புலியின் பேச்சைக் கேட்டு ராம்லால் நடுங்கினான். "ஒரு புலியை ஏமாற்றலாம். இத்தனை புலிகளை எப்படி சமாளிப்பது?' என்று குழம்பினான்.

அப்போது காற்று பலமாக வீசியது. கிளைகள் வேகமாகக் குலுங்கின. அதனால் இன்னொரு கிளையில் தூங்கியபடி இருந்த ஒரு குரங்கு, தடுமாறிக் கீழ்நோக்கி விழத் தொடங்கியது.

ராம்லாலின் மூளை சுறுசுறுப்பானது. அவன் புலிகளுக்குக் கேட்கும்படி கத்தினான்.

"குரங்கு நண்பா, கீழே நல்ல வேட்டை காத்திருக்கு.

நீ நேத்திக்கு ஒரு புலியைப் பிடிச்சியே. அது மாதிரி நிறையப் புலிகள் கீழே இருக்கு.

ஒரு குதி குதிச்சு ஒவ்வொரு புலியா பிடிச்சுக்கிட்டு வா. அதுகளை சட்டத்தில் அடைச்சுடுறேன்" என்றான்.

புலிகள் அவனது கர்ஜனையைக் கேட்டு நடுங்கின. அதே சமயம், குரங்கு கிழட்டுப் புலியின் மீது வந்து விழுந்தது.

அது விழுந்த வேகம், கிழட்டுப் புலியைத் திக்குமுக்காடச் செய்தது.

அது அதிர்ச்சியில் ஓடத் தொடங்கியது.

தலைமைப் புலி ஓடியதைக் கண்டு மற்ற புலிகளும் நாலா பக்கமும் சிதறின.

காலையானதும் ராம்லால் தெம்பாக மரத்திலிருந்து இறங்கி, கிராமம் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

05.2014
20

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 526 - சிரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 300,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1498 - போர்த்துக்கீச மாலுமி வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக்கோடு நகரை அடைந்தார்.
- 1570 - உலகின் முதலாவது நவீன நிலவரையை (atlas) ஆபிரகாம் ஓர்ட்டேலியஸ் வரைந்தார்.
- 1605 - ரோமைச் சேர்ந்த கத்தோலிக்க குரு தத்துவ போதக சுவாமிகள் கோவா வந்து சேர்ந்தார்.
- 1813 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் படைகளுடன் ஜேர்மனியின் சாக்சனி நகரில் நுழைந்து ரஷ்யா மற்றும் புரூசியாப் படைகளுடன் போரில் ஈடுபட்டு வெற்றி பெற்றான்.
- 1869 - யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு இணைப்பு வேலை நிறைவடைந்தது.
- 1873 - லேவி ஸ்ட்ராவுஸ், ஜேக்கப் டாவிஸ் ஆகியோர் இணைந்து செப்புத் தட்டாணியுடனான நீல ஜீன்சுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1882 - ஜேர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முத்தரப்புக் கூட்டணியை ஏற்படுத்தின.
- 1891 - தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது உடல் அசைவு ஒளிப்படக்கருவியைக் காட்சிபடுத்தினார்.
- 1902 - ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து கியூபா விடுதலை பெற்றது. தொமாஸ் எஸ்ட்ராடா பால்மா முதலாவது அரசுத் தலைவரானார்.
- 1940 - முதல் தொகுதி சிறைக்கைதிகள் அவுஷ்விட்ஸ் வதை முகாமை வந்தடைந்தனர்.
- 1949 - குவோமிங்தான் அரசு தாய்வானில் இராணுவ ஆட்சியை அறிமுகப்படுத்தியது.
- 1980 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக 60 விழுக்காட்டினர் வாக்களித்தனர்.
- 1983 - எயிட்ஸ் நோயை உண்டாக்கும் கிருமிகளைக் கண்டுபிடித்த செய்திகள் முதற் தடவையாக வெளியிடப்பட்டன.
- 1995 - கியூபெக் மாநிலத்தில் இடம்பெற்ற இரண்டாவது வாக்கெடுப்பில் கனடாவில் இருந்து விடுதலை பெறுவதற்கு எதிராக பெரும்பான்மையானோர் வாக்களித்தனர்.
- 1999 - புளூடூத் (Bluetooth) வெளியிடப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1799 - பல்சாக், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1850)
- 1845 - அயோத்தி தாசர், தமிழறிஞர் (இ. 1914)
- 1860 - எடுவர்டு பூக்னர், ஜேர்மனிய வேதியியல் அறிஞர் (இ. 1917)
- 1894 - சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீட குரு (இ. 1994)

### இறப்புகள்

- 2005 - செம்பியன் செல்வன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1943)
- 1506 - கிறிஸ்தோபர் கொலம்பஸ், இத்தாலியக் கடற் பயணி (பி. 1451)
- 1947 - பிலிப் லெனார்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1862)
- 1957 - த. பிரகாசம், இந்திய சுதந்திர போராட்ட வீரர், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலவர். (பி. 1872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

46

...சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டுச் சொன்னேன். சுற்றுப்புறத்துக்காக- சூழலுக்காக-அழகான இயற்கையின் ஆராதனைக்காக- யாருடைய மூச்சிலும் நுழையாமல் வரும் முதல் காற்றுக்காக- உங்கள் வீட்டைச் சுற்றிப் பச்சைப் பந்தல் கட்டியிருக்கும் இந்தப் பசுமரங்களுக்காக.

நான் புரிந்துகொண்டது பற்றிப் புளகித்தார்.

"இதோ அரளிப்பூ பார்த்தீர்களா! அரளிப்பூ! என் ஜன்னலோரம்" பள்ளிக்கூடம் விட்டு வந்த குழந்தையாய்க் குதுகலித்தார்.

"அது காலை வணக்கம் சொல்லித் தான் நீங்கள் கண் விழிப்பீர்களா?" என்றேன்.

அப்போது இரண்டு செவ்வரளிகள் சிரித்தன.

"தாவரங்களை நேசிக்காத வாழ்க்கை என்ன வாழ்க்கை" என்றார்.

"தாவரங்களை மனிதன் நேசிக்க வேண்டியது அழகுக்காக மட்டுமல்ல; ஆக்ஸிஜனுக்காகவும்தான்" என்றேன்.

"எப்படி?" என்றார்.

"தாவரங்கள் வெளியிடும் ஆக்ஸிஜன்



சிவசங்கரி

தான் இந்த வாயுமண்டலத்தை இன்னும் வாலிபத்தோடு வைத்திருக்கிறது. தாவரங்கள் அழிந்து கொண்டே போனால் எதிர்காலத்தில் அவனவன் சுவாசிக்க ஆக்ஸிஜன் சிலிண்டர் சுமந்து கொண்டே அலைய வேண்டிருக்கும்" என்றேன்.

சிரித்து வருந்தினார்; வருந்திச் சிரித்தார்.

அவரோடு கலை பேசலாம், கவிதை பேசலாம்; பரதநாட்டியம் பேசலாம்; தெருக்கூத்து பேசலாம்; வடுகபட்டியும் பேசலாம்; வடதுருவமும் பேசலாம்.

ஆர்வம்- அத்தனை ஆர்வம்!

தெரிந்ததைச் சொல்லிக் கொடுக்கும் வாய்மை; தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் நேர்மை.

சிவசங்கரியின் எழுத்துக்களில் பாசாங்கு இல்லை; பெரும்பாலும் ஏதேனும் ஓர் உறுத்தல் இல்லாமல் அவர் எழுதுவதில்லை.

பேனாவுக்குப் பிரசவ வலி எடுத்தால் தான் அதைத் தொடுவது என்று சங்கல்பம் கொண்டிருப்பவர்களில் அவரும் ஒருவர்.

எனவே சிவசங்கரியின் எழுத்துக்களில் பெரும்பாலும் சத்தியத்தின் தணல் கனன்று கொண்டேயிருக்கிறது.



ஒரு மனிதனின் தன்னம்பிக்கையை அவன் துக்கத்திலிருக்கும் போது கண்டுபிடித்து விடலாம்.

ஒரு மனிதனின் தாய்மொழியை அவன் தூக்கத்தில் பேசும்போது கண்டுபிடித்து விடலாம்.

ஒரு மனிதனின் ஒழுக்கத்தை அவன் இருட்டில் இருக்கும்போது கண்டுபிடித்து விடலாம்.

ஒரு படைப்பாளியின் நிஜத்தை அந்தப் படைப்புக்குள் இருக்கும் உள்ளார்ந்த ஒலியில் கண்டுபிடித்து விடலாம்.

சிவசங்கரியின் எழுத்துக்குள் நிஜம் இருக்கிறது.

அதை நான் விளங்கிக் கொள்ள நாளானது; விமர்சகர்கள் விளங்கிக் கொள்ள இன்னும் நாளாகும்.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 02 இல் கூட்டெண் 04 இன் பலன்கள்

07

### தோற்றம்

சந்திரனுடன் இராகு சேர்ந்த பலனை உடையவர். நடுத்தர உயரம் உள்ள இவர் மிக அழகாக இருப்பர். உடல் ஆரோக்கியமாக இருக்கும். சிரித்த முகத்துடன் இருப்பர். எடுப்பான மூக்கும் அளவான வாயும் பூசினாற்போன்ற கன்னங்களும் அறிவை வெளிக்காட்டும் அழகான கண்களும் அகன்ற நெற்றியும் அமைந்திருக்கும். இரட்டை நாடி, பட்டை சரீரமுள்ளவர். மார்பும் தோலும் குறுகி இருக்கும். கவர்ச்சியும் சாந்தமும் உள்ளவர்.

### குணம்

மனம் நோக்கமின்றி எதிலாவது எப்போதும் ஈடுபடும். ஒன்றில் மனம் ஒன்றாது. பார்த்தவுடன் எதையும் யாரையும் புரிந்து கொண்டு விடுவர். கல்வி தடைப்படும். ஆணானால் நிறையப் பேருக்கு இறுதிக் கடன் புரிவர். இள வயதில் பெற்றோரை இழப்பர். சிறு வயதிலேயே வேலைக்கும் போவர். தன் வாழ்க்கையைத் தானே பார்த்துக் கொள்ளுவர். அதிகம் பிறரைச் சார்ந்து இருப்பர். நண்பர்களுடன் அதிகம் ஒட்டி விடுவர். நல்லவரா கெட்டவரா எனப் பாராமல் நண்பர்கள் ஆக்கிக் கொண்டு விட்டுப் பிரிய முடியாமல் தொல்லை பல அனுபவிப்பர். இவருக்கு நல்ல பெயர் போகிற இடமெல்லாம் காணுகிற நபர்களிடமெல்லாம் கிட்டும். வீட்டில் நற்பெயர் கிடைக்காது. காரணம் படிக்காமல் கண்டபடி சுற்றித்திரிவதே. விதி வழி வாழ்க்கை என தம்வசம் இன்றி நடப்பர். பிறருக்கு ஆலோசனை வழங்கி சிக்கல்களிலிருந்து காப்பார்.

சிறந்த அறிவாளி. எவரும் இவரை வெறுக்க மாட்டார். எல்லாம் அறிந்து இருப்பர். நிறையப் படிப்பார். தம் கடமை வேலையில் கோட்டைவிட்டு சுயலாபம் இழப்பர். மணமான பெண்களும் இவரை நேசிப்பர். மிக மேலான நிலையை அடைய வேண்டியவர் இப்படிக் கெட்டுப் போகிறாரே என இவருக்காக பலர் வருந்துவர். வேளைக்கு உண்ணாமல் உறக்காமல் திரிவார்.

தொழிலில் அதிக திறமை இருக்கும். அதை வைத்து பணம் அதிகம் பண்ண முயலமாட்டார். நிறைய வருவதையும் செலவழித்து விடுவார். அச்சம் உள்ளவர். பிறர் இவரை அச்சுறுத்திப் பொருளைப் புடுங்கிச் சென்று விடுவர். மனதுக்குப் பிடித்தபடி வாழ்கிறேன் என்று நிலையின்றி அலைவர். உதவ பலர் இருந்தும் வீணாகக் கெட்ட (குடிப்) பழக்கத்தால் தம்மைத்தாமே அழித்துக் கொள்ளுவர். அருமையாகச் சூதாடுவர். ஆச்சாரம் எல்லாம் அறிந்திருந்தும் அநாச்சாரமாகவே நடப்பார். உறவினர் அருகில் இன்றியே திடீரென தம் வாழ்வு முடிய மறைவார். அந்நிய இடத்தில் போய் குடியிருந்து மரிப்பார். பேச்சு வக்கிரமாக வருவது போலவே வாழ்க்கையும் முறையின்றி முடியும்.

### குடும்பம்

பிறந்தது முதல் குடும்ப நிலை தாழ துன்ப நிலையைச் சந்திப்பார். உடல் சிரமம் மிகும். கூலி வேலைக்குக் கூட போக நேரலாம். துன்பங்கள் பல பட்டாலும் இவருக்கு உரைக்காது. சிரமப்பட்டுழைத்து நிறைய சம்பாதிப்பர். தாமே செலவும் செய்து விடுவர். வருமானம் பெருகினாலும் ஒரு நிலை அமையாது. சிறு வயதில் பிறந்த குடும்பத்துடனேயே ஒட்டியிரார். வளர்ந்தும் குடும்பம் அமையாது. மண வாழ்க்கை அமைவதும் துர்லபம் குடும்பம் இவர்களுக்குப் பிடிக்காது. தப்பித் தவறி அமைந்தாலும் பிரச்சினைகளே குடும்ப வாழ்க்கை ஆகும். எவரையும் நம்ப மாட்டார். ஆதலால் இவருடனிருந்து வாழப்பிடிக்காமல் மனைவி, நண்பர், உறவினர் பிரியலாம். கூடியிருப்பவரால் தொல்லையே மிகும். தனிமையே இவர் வாழ்வு. குடும்பத்தரால் கைவிடப்படுவர்.

### தொழில்

சிறு சிறு வேலைகளில் இருப்பார். மிகச் சிலர் அலுவலங்களில் வேலை புரிவர். சுயேட்சையாகப் பணி புரிவதே இவர் இயற்கை. பிறருக்கு அடங்கி வேலை செய்ய மாட்டார். பல இடங்களில் மாறி மாறிப் பணி புரிவர். அச்சாபீஸ், பத்திரிகை, போக்குவரத்து, சமையல்பணி, சுட்ட வேலைகளில் இவர்களைப் பார்க்கலாம். சாதாரணமாக அரட்டை இடங்கள், நூலகங்கள், சூதாட்டக் கிளப்புகள், பார்களிலும் இவர்களைக் காணலாம். அந்நிய மொழி அவ்வளவு எளிதில் வராது. ஆனால் பிறதேச இடங்களில் இவர்களைப் பார்க்கலாம். பெரிய கெட்டப்களில் அந்நிய உணவு வகைகளை ருசிப்பது, வசணங்களில் செல்லுதல், நிறையச் செலவழிப்பது இவர்களின் வழக்கம். ஆகாவே பணம் சம்பாதிக்க வேலை செய்வர். ஆனால் பணக்காரனாக ஆசை இருந்தும் அதற்காக தொழிலில் ஈடுபட்டு வளர்க்க மாட்டார். சித்தம் போக்கு சிவன் போக்கு என்றே இருப்பார். அழகு நிலையம், ஜிம் போன்றவை நடத்தலாம்.

### நோய்

சாதாரணமாக இவர்கள் நோய் வாய்ப்படுவதில்லை. ஜலத் தொடர்பான நோய் வரும், காய்ச்சல் சிறு வயதில் அடிக்கடி பாதிக்கும். மஞ்சள் காமாலை, கல்லீரல் கோளாறு [illegible] நரம்பு இலேசா[illegible] வாய்ப்புண் உண்டாகும். காது மந்தமாகும்.



# உங்கள் பிறந்த எண் 02 இல் கூட்டெண் 05 இன் பலன்கள்

### தோற்றம்

சந்திரனுடன் புதன் இணைந்த பலன் பெறுபவர். சிறிய முகம், சிவந்த நிறம், மெலிந்த உடல், நடுத்தரமான உயரம் இருக்கும். கண்கள் அழகாக இருக்கும். அழகான தோற்றத்துடன் கவர்ச்சியுடன் எல்லோரும் விரும்பும்படி இருப்பர். பற்கள் வரிசையாக இருக்கும்.

### குணம்

நகைச்சுவை உணர்வு மிக்கவர். அழகாக உடுத்தவும் ஆசைப்படுவார். பிறர் பாராட்டை அதிகம் விரும்புவார். இதற்காக அதிகம் பிரயாசைப்படுவர். தம்மை தாழ்த்திக்கொண்டும் நகைச் சுவையாகப் பேசி பிறர் மெச்சும்படி செய்ய முயல்வார். எல்லாம் தெரிந்தவர்போல பேசுவார். தம் அறியாமையை மறைக்க சப்பைக்கட்டு கட்டி ஏதேதோ சொல்வார். பிறர் பேசுவதைக் கவனிக்காமல் தம் மனதில் இருப்பதையே பேசுவர். பரோபகாரம், பொதுசேவை எதுவும் இவரிடம் இருக்காது.

அறிவும் புதுமையில் ஆர்வமும் சுறுசுறுப்பும் இவர்களிடம் இருக்கும். பொழுதுபோக்கில் அதிக காலம் களிப்பர். நல்ல கருத்துக்களில் பிரியமேற்படும். முடிந்தவரை நியாயமாக நடப்பர்.

ஆசையும், புதிய புதிய சங்கதிகளை அறியவேண்டும், புதிய புதிய இடங்கள், பொருட்கள், அழகுகளைக் காண வேண்டும் என்ற ஆர்வமுமிருக்கும். கற்பனை மிகும். கனவுகள் அதிகம் வரும். வாய்ப்பு இருந்து முடிந்தால் பிறக்கு உதவ நினைப்பர். மனம் ஆசை எண்ணங்களால் பலவீனப்படும். அச்சமே இவர்களை நல்லவராகப் பாதுகாக்கும். சுயநலம் நிறைவேறப் போராடுவர். தைரியசாலிபோல நடிப்பர். யாக்கிரதையுடன் வாழ்வர். எண்ணுவதுடன் பலவற்றை விட்டுவிடுவர். சிரமங்களைச் சகித்துக்கொள்வர். பசி பொறுப்பர். சிலவற்றை இரகசியமாக வைத்துக் காப்பர். ஆத்திரம் வரும். ஆனாலும் அதன்படி நடக்கத் துணிவிருக்காது. அகிம்சை வழி நடப்பவராக சமாதானம் செய்து கொள்ளுவர். பரிதாபப்படுவது [illegible] கொள்வர். பிறர் துயர் தீர்ப்ப[illegible] அலட்டிக்கொள்ளமாட்டார். பல மொழிப் பாண்டித்யம், மொழிப் பற்று இருக்கும். அதிகம் பேசிக் குழப்புவர். யாராவது குறை கூறினால் மட்டம்தட்டினால் தாங்கமாட்டார். நெருங்கியவரும் இவர்களைச் சந்தேகிக்கும்படி நடப்பர்.

எழுத்து, வாதிடல், அரசியல் ஈடுபாடு இருக்கும். வெளியே ஒன்றும் உள்ளே ஒன்றுமாக நடப்பர். ஆனாலும் நல்லவரே. மக்களிடம் செல்வாக்கு இருக்கும். தம் தொழிலைச் சரியாகச் செய்வார்.

### குடும்பம்

கல்வி கற்பர். பட்டம் பெறுவர். ஏற்ற தொழிலைச் சிறப்பச் செய்து முன்னேறுவர். வருமானம் கூடிக் கொண்டே போகும். செல்வம் சேர்ப்பர். வீடு, நிலம், தோட்டம் உண்டாகும். மனைவி, மக்கள், உறவினருடன் குடும்பத்தில் வாழ்வர். மதிப்பும் மரியாதையும் இருக்கும். பெரியோரை மதிப்பர். குடும்ப வழக்கத்தை விடமாட்டார். மனம் ஒத்த மனைவி, பிள்ளைகள் உண்டாகையால் நல்ல வாழ்க்கையுண்டு. சிறு சிறு பிரச்சினைகளைத் தவிர வம்புகளை இழுத்து விட்டுக் கொண்டு விடாமல் கவனமாக குடும்ப வாழ்வை நடத்துவார். வீட்டுப் பொறுப்பை இவர் ஏற்க மாட்டார்.

### தொழில்

வக்கீலுக்குப் பொருத்தமானவர். ஆனாலும் படிப்புக்கு ஏற்ற தொழிலைவிட தமக்குப் பிடித்த தொழிலே செய்வர். சொந்தத்தில் தொழில் செய்யும் நாட்டமும் கொள்வர். அரசாங்க வேலையில் இருந்தாலும் பாதியில் விலகி வேறு சுய தொழில் தொடங்கி செய்வர்.

தனியார் நிறுவனப் பணி புரிந்தாலும் அப்படியே தனித்தொழிலே புரிவதில் நாட்டம் கொள்வர். நூல் வெளியிடும் பதிப்பகம் நடத்துதல், மெடிக்கல் ஸ்ரோர்ஸ் வைப்பது, பத்திரிகை ஆசிரியராக, சொந்தக்காரராக இருப்பது செய்வர். நன்கு நிர்வாகம் புரிவர். ஆன்மிகம் சம்பந்தமாகவும் இருந்து வாழ்வர். ஆடியோ, வீடியோ, கேசட், சீ.டி. தொடர்பான வியாபாரமும் டி.டி.பி., கணனி சென்ரர் கூட வைத்துச் சம்பாதிப்பர்.

### நோய்

இவர்கள் அதிக சுறுசுறுப்பாகவும், அலைந்து திரிந்தும் இயங்குவதால் நரம்புத் தளர்ச்சி இருக்கும். பெண்களுக்கு ஹிஸ்ரீரியா உண்டாகலாம். பி.பி.வரும்.

பல்வலி, ஈறு நோய், நீரோ பலிமர் (கை, கால்களில் நுனியில் குத்தல், கூசல் ஏற்படுவது), பார்க்கின்ஸ் (கை, கழுத்து நடங்குதல்) உண்டாகலாம். சர்க்கரை நோய் வரலாம். அடி முதுகு, கழுத்து வலி தாக்கும்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைப் பாதுகாக்க 10 கட்டளைகள்!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

**1-4 மாதங்கள்:**

இந்தக் காலகட்டத்தில் அநேகமாக எந்தப் பிரச்சினையும் குழந்தைக்கு வராது. தாய்ப்பால்தவிர, வேறு எந்த உணவும் கொடுக்கக் கூடாது. புட்டிப்பால் போன்றவற்றால் நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்பு உண்டு.

இந்தச் சமயத்தில், குழந்தையின் பார்வைத் திறன், கேட்கும் திறன், சுற்றுச்சூழலை உன்னித்துக் கவனிக்கும் திறன் ஆகிய மூன்று விடயங்களைக் கவனிக்க வேண்டும். அம்மாவின் குரல் கேட்கும் திசையில் குழந்தை திரும்புகிறதா, யாராவது அருகில் வந்து கொஞ்சிவிட்டுப் போனால் அவர்கள் போகும் திசையில் திரும்பிப் பார்க்கிறதா, சுற்றுச்சூழலைக் கவனிக்கிறதா என்று பார்க்க வேண்டும். இந்த மூன்றும் சாதாரணமாக இல்லாவிடில், மருத்துவரிடம் காண்பிக்கவேண்டும். இந்த வயதில்தான் குழந்தை முகம் பார்த்துச் சிரிக்கும். மின்சார விளக்கு, மின் விசிறி போன்றவற்றை ரசிக்கும். கழுத்து நிற்பதும் இந்த மாதங்களில்தான். அதனால் ஜாக்கிரதையாகத தூக்க வேண்டும்.

**6ஆம் மாதம்:**

ஐந்து மாதங்கள் வரையில் குழந்தையின் எல்லா வளர்ச்சிகளும் ஒழுங்காக இருந்தால், 6-ஆம் மாதத்தில் இருந்து, தாய்ப் பாலுடன்திட உணவு கொடுக்க ஆரம்பித்து விடலாம். வேகவைத்து மசித்த காய்கறிகள், புழுங்கலரிசி, பொட்டுக் கடலை, ராகி சேர்த்து அரைத்த மாவில் கஞ்சி, மசித்த வாழைப்பழம் போன்றவற்றை முதலில் சிறிது சிறிதாகக் கொடுத்துப் பழக்கலாம்.

இந்தச் சமயத்தில் குழந்தை, தானாக எழுந்து உட்கார முயற்சிக்கும். வாயில் போட்டுக்கொள்கிற மாதிரி சிறிய பொம்மைகளாக இல்லாமல், கைகளால் பிடித்து விளையாடுவது போலப் பெரிய பொம்மைகள் தரவேண்டும். கூடிய வரையில் தரையில் உறுத்தாத விரிப்பில் விடுவது நல்லது.

**7, 8ஆம் மாதங்கள்:**

கஞ்சி, மசித்த காய், பழம் இவற்றிலிருந்து கொஞ்சம் முன்னேறி, பருப்பு சேர்த்துப் பிசைந்த, மசித்த சாதம் கொடுக்கலாம். நாம் சாப்பிடுவது போலவே, மூன்று வேளைகள் திட உணவு கொடுக்க வேண்டும். தாய்ப் பாலையும் நிறுத்தக் கூடாது. 8-ஆம் மாதத்தில், முட்டி போட்டுத் தவழத் தொடங்கும். குழந்தைக்கு ஞாபக சக்தி வரும் வயது இதுதான். இந்தப் பருவத்துக்குத் தகுந்தமாதிரி அதன் விளையாட்டுகளும் இருக்கும். எதையாவது துணிக்குக் கீழ் ஒளித்து வைத்தால் கண்டுபிடிக்கும் நன்றாக உடை போட்டு, தலை வாரினால் வெளியே கிளம்புகிறார்கள் என்று புரிந்துகொள்ளும். அப்பா அலுவலகத்திலிருந்து வருவது... போன்ற எல்லாமே குழந்தைக்குத் தெரிய ஆரம்பிக்கும்.

**9, 10ஆம் மாதங்கள்:**

9-ஆவது மாதத்தில் இருந்து விரல் களின் ஒருங்கிணைப்பு நன்றாக வந்துவிடும். சாப்பாட்டைத் தட்டில் போட்டு வைத்தால், மேலே கீழே சிந்தி, கைகளால்அளைந்துவிளையாடும். ஆனால், சிறிய அளவேனும் வாயில போட்டுக் கொள்ளும். அப்போதுதான், ஒரு வயதில் தானாகச் சாப்பிட ஆரம்பிக்கும்

வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எது கிடைத்தாலும் குழந்தை, அதை எடுத்து வாயில் போடும். குட்டையான மேஜை, டீப்பாய், ஸ்டூல் போன்றவற்றின் மேல் மறந்தும் கூட கனமான பொருடகளை வைக்கக் கூடாது. பிடித்துக்கொண்டு நிற்கும் ஆர்வத்தில், குழந்தை மேஜை விரிப்பைப் பிடித்து இழுக்கக் கூடும். அதன் மேலுள்ள பொருட்கள், குழந்தையின் மேல விழுந்து காயப்படுத்த லாம். இந்தப் பருவத்தில், காலை, மதியம், இரவுஎன்பதோடு, 4-ஆவது வேளையாக மாலையில் ஏதாவது "சிற்றுண்டி கொடுக்கலாம்.

ஒரு வயதில் பேச்சு வர ஆரம்பிக்கும். திட உணவு, தாய்ப்பால் ஆகியவற்றுடன், பசும்பால் அல்லது பக்கெட் பால் போன்ற வேறு பால் ஓரிரு வேளை கொடுக்கலாம். தாய்ப்பால் 2 வயது வரை கொடுக்க வேண்டும். வேலைக்குப் போகும் பெண்கள், தாய்ப்பாலைப் பிழிந்து எடுத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டுப் போகலாம். ஆனால், குழந்தைக்குக் கொடுப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன் வெளியே எடு த்து, சூடுபடுத்தாமல், அறை வெப்ப நிலைக்கு வந்ததும் கொடுக்கலாம்.



வயிற்றுப்போக்கு, ஜலதோஷம், இருமல்... மூன்றும், ஒரு வயதுக்கு மேல் அடிக்கடி வரும். இவற்றில் ஏதேனும் ஒன்று வந்த பிறகும் குழந்தை, சுறுசுறுப்பாக இருக்கிறதென்றால், பயப்பட வேண்டாம். தானாகவே ஒன்றிரண்டு நாளில் சரியாகிவிடும். ஆனால், மேற்கூறிய 3 பிரச்சினைகளில் ஏதேனும் ஒன்று இருந்து, குழந்தை சோர்ந்து போய் இருந்தாலோ, மூச்சுத்திணறல் இருந்தாலோ, மருத்துவரின் ஆலோசனையுடன் ஆன்டிபயாடிக் கொடுக்கலாம்.

அப்புறம் என்ன? ""நான் வளர்கிறேனே அம்மா என்று, இதன் பின்னர் கிடுகிடுவென வளர்ந்து

**Health Care**

## மருத்துவ உலகம்

**உங்கள் நலம் உங்கள் கைகளில்**

விடுவார்கள் குழந்தைகள்"".

பிறந்து 5 முதல் 10 நாட்களுக்குள் (சில சமயம், 3 நாட்களில்), பச்சிளம் சிசுவின் தொப்புள் கொடி, அதுவாகவே விழுந்து விடும். பிடித்து இழுக்கவோ, மரு ந்து வைக்கவோ தேவையில்லை. தானாகவே ஆறிவிடும்.

எல்லாக் குழந்தைகளுக்குமே பிறந்ததும்மஞ்சள்காமாலை இலேசாக இருக்கும். முகம், நெஞ்சு, கண்கள் இலேசாக மஞ்சளாக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை. அது சாதாரணமானதுதான் ஆனால், கைகள், கால்களில் மஞ்சள் பரவினால், இரத்தப் பரிசோதனை செய்து, "நீல நிற ஒளியில் வைக்க வேண்டுமா என்று பார்க்கவேண்டும்.

பிறந்த 5 நாட்களில், பிறந்த போது இருந்த எடையை விடக் குறைந்து, மறுபடியும் 10ஆவது நாளில் இருந்து எடை கூடும். அதனால், கவலைப்பட வேண்டாம். குழந்தை நன்கு சிறுநீர் கழிக்க வேண்டும். (முற்றும்)

# விவசாயிகளுக்கு வழங்கிய உரமானியம் நெல் உற்பத்தியை அதிகரித்துள்ளது

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டில் மஹிந்த சிந்தனை திட்டத்தினூடாக விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்பட்டு வருவதினூடாக நெல் உற்பத்தி அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பலாந்தோட்ட சமனலகம ஆரம்ப பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதான மண்டபத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது நாட்டிற்கு கோதுமை மாவினை இறக்குமதி செய்து எமது மக்களுக்கு பழக்கிய வெளிநாட்டவர்களுக்கும் நாம் இன்று சோறு சாப்பிட பழக்கியுள்ளோம்.

ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதினூடாக எமது குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பது தெட்டத் தெளிவாகும். நாம் வெளிநாடுகளிலிருந்து கடன் தொகைகளை பெற்று இவ்வாறான அபிவிருத்திகளை முன்னெடுப்பது எதிர்கால சந்ததியினரின் நலன் கருதியே.

அன்று எமக்கு கிடைக்காதவைகளை எமது குழந்தைகளுக்கு வழங்கி வருகின்றோம்.

இதனால்தான் நகரங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டு வந்த சில வளங்கள் தற்பொழுது கிராமங்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (2)

# பிரபாகரன் தப்பிச்செல்ல மேற்குலகம் உதவவில்லை

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தப்பி செல்ல இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ உதவிகளை வழங்கவில்லை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான உறவுகள் தொடர்ந்தும் வலுவாகவே காணப்படுகின்றது. கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சில தரப்பினர் பிரபாகரன் உள்ளிட்ட புலிகளின் சிரேஷ்ட தலைவர்களை காப்பாற்ற முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்ட போதிலும், இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ அந்த முயற்சியில் ஈடுபடவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்கும் முனைப்புக்களுக்கு பல நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் சரணடைவதன் மூலம் யுத்த சேதங்களை தவிர்க்க முடியும் என சில நாடுகள் கருதியதாகவும் அதற்காக சில நாடுகள் முயற்சி மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட ஒரு நாட்டின் தூதுவர் குமரன் பத்மநாதனை மலேஷியாவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் இன்று நாடாளுமன்றில்

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் நிலையில், அமைச்சரவையின் விசேட கூட்டம் ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் அவசரமாகக் கூட்டியுள்ளார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் இது பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. அரசாங்கத்தில் இடம்பெறும் முறைகேடுகள் உட்பட பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியே இந்தப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது.

இந்நிலையில் இந்தப் பிரேரணையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து ஆலோசனை நடத்துவதற்காக அமைச்சரவையின் அவசர கூட்டம் நேற்று கூட்டப்பட்டது.

இதேவேளையில், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பதை ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் கூட்டம் ஒன்றும் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறவிருக்கின்றது. (2)

# தொழில்நுட்பத்துறையின் ஆளணிவீதம் அதிகரிப்பு

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையின் ஆளணித் தொகுதி 2013 ஆம் ஆண்டில் 50 வீத அதிகரிப்பை காட்டியுள்ளது.

இது 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50 வீத அதிகரிப்பாகும். இந்த ஆய்வை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் நடத்தியுள்ளது.

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் 75ஆயிரத்து 107 பேர் தொழில் புரிகின்றனர். இது 50ஆயிரத்து 159 பேராக 2010 ஆம் ஆண்டில் அமைந்திருந்தது. 40.8 வீதமானோர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கம்பனிகளில் பணியாற்றுகின்றனர்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சாராத தனியார் கம்பனிகளில் 47.1 வீதமானோர் பணியாற்றுகின்றனர். அரச சார்பான நிறுவனங்களில் 7.8 வீதமானோரும் வர்த்தக நிறுவனங்களில் 4.2 வீதமானோரும் தொழில் புரிவதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணிந்து யுத்த வெற்றி கொண்டாட்டங்களை கைவிட முடியாது

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

**சர்வதேச அழுத்தங்களுக்கு எந்த வகையிலும் அடி பணியப் போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாதத்தை இல்லாதொழித்தமை குறித்த கொண்டாட்டங்களில் ஈடுபட இலங்கைக்கு எல்லா சகல வகையிலான உரிமைகளும் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை கைவிட முடியாது எனவும், தொடர்ச்சியாக கொண்டாட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் பயங்கரவாதத்திற்கு எதிராக இடம்பெற்ற யுத்தத்தை கனடா பிழையாக விளங்கிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். சிங்கள, தமிழ் மக்கள் யுத்தத்தில் வெற்றியீட்டியுள்ளதாகவும், பயங்கரவாதிகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடியர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களை கனடா விளங்கிக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை என கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெல்லி வைட்டிங் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக சொறபளவிலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களே நாட்டுக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்திருக்காவிட்டால் தொடர்ந்தும் சிறுவர் போராளிகள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார். நான்காம் கட்ட ஈழ யுத்தத்தில் 6 ஆயிரம் படையினர் உயிர்த்தியாகம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் அளவு படையினர் நிலைநிறுத்தம் தொடர்பில் உலக நாடுகள் தீர்மானம் எடுக்க முடியாது எனவும், அதனை தேசிய பாதுகாப்பின் அடிப்படையில் இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# பீடாதிபதிக்களை சந்தித்து ரணில் பேச்சுவார்த்தை

ஒரு மாத கால அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கண்டியில் மகாநாயக்க தேரர்களுடன் மூடிய அறைக்குள் விரிவான பேச்சுக்களை நடத்தியிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மல்வத்தை, அஸ்கிரிய, சியாம் நிக்காய, அனுநாயக்க ஆகிய பிரிவுகளின் பீடாதிபதிகளை கண்டியில் சந்தித்த ரணில் விக்ரமசிங்க ஒவ்வொருவருடனும் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாகப் பேசியுள்ளார்.

மூடிய அறைக்குள் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களின் போது அவரது கட்சியின் சார்பில் வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஊடகவியலாளர்களும் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் காணப்படும் நிலை, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது உட்பட முக்கிய பிரச்சினைகள் குறித்து தன்னுடைய நிலைப்பாட்டை விளக்கிய ரணில் விக்ரமசிங்க, அவை குறித்து மகாநாயக்கர்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்டிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (2)

## சார்க் திரைப்பட விழா கொழும்பில்

(கொழும்பு)

சார்க் திரைப்பட விழா எதிர்வரும் 22 முதல் 25 ஆம் திகதி வரை திரைப்படக் கூட்டுத்தாபன சினிமா அரங்கில் நடைபெறும். சார்க் கலாசார நிலையம் நான்காவது முறையாக இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இத்திரைப்பட விழாவில் தெற்காசிய வலய அங்கத்துவ நாடுகளான ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் பங்குகொள்ளும்.

சகல திரைப்படங்களும் இலவசமாகவே காண்பிக்கப்படும். கலாசார, கலைகள் அமைச்சர் ரீ.பீ. ஏக்கநாயக்கா தலைமையில் ஆரம்ப வைபவம் 20 ஆம் திகதி மாலை நடைபெறும்.

இத்திரைப்பட விழாவில் அந்தந்த நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வண்ணம் திரைப்பட இயக்குநர்களும், நடிக, நடிகையரும் பங்கு கொள்வர். (2)

# நினைவஞ்சலி நிகழ்வுகள் குந்தகம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளன

## பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு



யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவஞ்சலி நிகழ்வுகள் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகள் தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் வகையில் அமைந்த காரணத்தினால் பொலிஸார் அதனை தடுத்து நிறுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடும் போது, யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்த ஏன் முடியாது என பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அஞ்சலி நிகழ்வுகள் புலிகளுக்காக நடத்தப்படவில்லை எனவும், உயிரிழந்த சொந்தங்களுக்காக நடத்தப்படுவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத மாணவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், அரசாங்கக் கட்டடங்களில் நிகழ்வுகளை நடத்த வேண்டுமாயின் அதற்கான அனுமதியினை பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## மூத்தோர் பெருமை

ஒரு ஊரிலே ராஜா ஒருவர் இருந்தார். அவருக்குப் பின்னர் இளவரசன் பட்டத்துக்கு வந்தான்.

இந்த இளவரசனுக்கு ஒரு குணம்... அதாவது அவனுக்கு வயதானவர்களைக் கண்டால் பிடிக்காது.

இளைஞர்களின் வளர்ச்சிக்கு பெரியவர்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அதனால் அவன் பட்டத்துக்கு வந்ததும் உத்தரவிட்டான்.

"இந்த தேசத்திலே பெரியவர்கள் யாரும் இருக்கக் கூடாது. அவர்களை நாடுகடத்த வேண்டும். இந்த உத்தரவை மீறி யாராவது வயதானவர்களை வீட்டிலே வைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

எல்லோரும் இந்த உத்தரவுக்குப் பயந்து அவர்களது அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரையும் வேறு தேசத்துக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். இளைஞர்களைமட்டும் வைத்துக்கொண்டு இவன் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தான்.

இப்படி இருந்த காலத்திலே அந்நிய நாட்டிலே இருந்து ஒரு வித்தைக்காரன் வந்தான்.

என்னோடு போட்டியிடக் கூடிய புத்திசாலிகள் யாராவது இந்தத் தேசத்திலே இருக்கிறார்களா? என சவால் விட்டான். இப்படியாக இவன் சவால் விட்டது அந்த இளவரசனின் காதுக்கு எட்டியது.

உடனே இவனை அழைத்து "என்ன உன்னுடைய சவால்.... அதைச் சொல்" என்றான் இளவரசன்.

"இளவரசே ! வேறு ஒன்றுமில்லை. சாம்பலைக் கயிறாக திரிக்கவேண்டும். இது ஒரு போட்டி. அதன்பின்னர் இன்னொரு போட்டி இதோ இந்த சங்கிலே நூலைக் கோர்த்துக் தரவேண்டும் என்றான்.

இரண்டுமே சாத்தியமில்லாத விடயம் என்பதை இளவரசன் உணர்ந்தான். இதுதான் இன்னொரு தேசத்திலே இருந்து வந்தவன் போட்ட சவால்.

இதைக் கேட்ட இளவரசனுக்கு அவமானமாகப் போய் விட்டது. இவனுடைய சவாலை ஏற்றுக்கொள்வதற்கு இந்தத் தேசத்திலே இளைஞர்கள் யாருமே கிடையாதா? என்று கேட்டான். இதை ஊர் அறிய அறிவிக்குமாறு சொன்னான்.

ஒரேயொரு இளைஞன் மட்டும் வந்தான். "என்னால் முடியும்" என்றான்.

இளவரசனுக்கு ஆச்சரியம்....

"எங்கே சாம்பலைக் கயிறாகத் திரித்து கொண்டுவா பார்க்கலாம்" என்றான். இவன் சற்று இருங்கள் என்று சொல்லிவிட்டு அடுத்த அறைக்குப் போனான். சிறிது நேரத்தில் தட்டோடு ஓடி வந்தான். அந்தத் தட்டிலே... சாம்பலினால் திரிக்கப்பட்ட கயிறு! எல்லோருக்கும் ஆச்சரியம்.

சரி அடுத்தது சங்கிலே நூலைக் கோர்ப்பதா? சிறிது நேரம் பொறுங்கள் என்று கூறிவிட்டு சற்றுநேரம் கழித்து திரும்பி வந்தான். அவன் கையிலே சங்கு அதிலே ஒரு பக்கம் நூல் போய் இன்னொரு பக்கம் வெளியே வந்திருந்தது.

அந்நிய தேசத்தவனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. தோல்வியை ஒத்துக்கொண்டு திரும்பினான்.

இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டி பரிசு வழங்கினான்.

அதன்பின்னர் மெதுவாகக் கேட்டான், அது சரி... அது எப்படி சாம்பல் கயிறானது என்றான்.

ஒரு கயிறையெடுத்து தட்டத்தில் வைத்துக் கொளுத்தினேன். அது சாம்பலானது. அசையாமல் மெதுவாக எடுத்து வந்தேன்.

சங்கிலே நூலை நுழைத்தது எப்படி? என்றான்.

ஒரு எறும்பைப் பிடித்து அதன் உடம்பிலே ஒரு மெல்லிய நூலைக்கட்டினேன். சங்கிலே ஒரு பக்கமாகப் கட்டினேன். அடுத்தபக்க நுழைவாயிலில் சீனியை வைத்தேன். எறும்பு நூலை இழுத்துக்கொண்டு இந்தப் பக்கமாக வந்தடைந்தது என்றான்.

இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்? என்றான் அவன்.

இளவரசரே! மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியாமல் என்னுடைய தாத்தா, அப்பா, அம்மா ஆகியோரை வீட்டிலே மறைத்து வைத்திருக்கிறேன். அவர்கள் கூறித் தந்த யோசனைதான் இதுவென்றான்.

இளவரசனுக்கு தவறு புரிந்தது. நாடு கடத்திய பெரியவர்களையெல்லாம் உடனடியாக திருப்பி அழைத்து வந்தான். அவர்களது அனுபவ அறிவுக்கு மதிப்புக் கொடுக்க ஆரம்பித்தான்.

பெரியவர்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும், அவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது. அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் பெறுமதியானவை என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். முக்கியமாக சிறியவர், பெரியவர்களின் சொற்படி நடப்பது சாலச் சிறந்ததாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் மீதான இந்தியாவின் வன்மம்



போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் முடிந்துள்ள நிலையிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை உலகம் முழுவதிலும் நீடிக்கப்பட்டு வருகிறது. இலங்கையிலும் இந்தியா, அமெரிக்கா, கனடா, மலேசியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை இருந்து வருகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை அண்மையில் வெளியான அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அறிக்கை கூட நீடிப்புச் செய்து இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டு இருந்தாலும் அதன் சர்வதேச வலையமைப்பு இன்னமும் செயற்படுவதாகவும் இந்தியாவிலும் இலங்கையிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் செயற்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஆண்டு தோறும் இந்த தடை நீடிப்பை மார்ச் மாதங்களில் வெளியிட்டுவரும் உலக நாடுகளின் தீவிரவாதம் பற்றிய அறிக்கையில் வெளியிட்டு வருகிறது. கனடா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகி விட்ட நிலையிலும் அதன் மீதான தடையை அகற்றத் தயாராக இல்லை. இந்த நிலையில்தான் கடந்த வியாழக்கிழமை (மே 15 ஆம் திகதி இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குஐந்து ஆண்டுகளுக்குதடையை நீடிக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது.

இந்திய மத்திய உளவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 1967 ஆம் ஆண்டின் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை 2014 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி தொடக்கம், மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவதாக, தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை, கடந்த 22 ஆண்டுகளாக நீடிக்கின்ற நிலையில் இந்த தடை நீடிப்பு ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. ஆனால், ஒரேயடியாக 5 ஆண்டுகளுக்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதுதான், ஆச்சரியத்தையும் காங்கிரஸ் கட்சியின் பழியுணர்ச்சியையும் வெளிக்காட்டியுள்ளது. விடுதலைப் புலிகள் மீதான இந்தியாவினது இந்தத் தடை பெரிதாக எந்த விளைவையும் ஏற்படுத்தப்போவதில்லை. இராணுவ ரீதியாக இலங்கையில் அடியோடு அழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இந்தியாவில் தடை நீக்கப்பட்டு விட்டாலும்கூட, விடுதலைப் புலிகள் இயக்கத்தினால், வலுப்பெற முடியாது. ஏனென்றால், அதன் தலைமைத்துவக் கட்டமைப்பு அடியோடு பெயர்க்கப்பட்டுவிட்டது. விடுதலைப்புலிகளின் தலைவர், வே.பிரபாகரன் உள்ளிட்ட அதன் தலைமைத்துவக் கட்டமைப்பு முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டதை, சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் பின்னர், அதன் தலைமைத்துவத்துக்காக வெளிநாடுகளில் போட்டியிட்டனர் என்பது உண்மை.

1991 ஆம் ஆண்டு மே மாதம், ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, சரியாக ஒரு வருடம் கழித்து, 1992 மே மாதம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது.

இந்த தடை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிப்புச் செய்யப்பட்டு வந்தது. கடைசியாக, 2012 ஆம் ஆண்டு இந்த தடை நீடிப்பு அறிவிப்பு, இந்திய மத்திய உள்துறை அமைச்சினால், வெளியிடப்பட்டிருந்தது. அப்போதே, விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், இந்த தடை நீடிப்பு அவசியமா என்ற கேள்விகள் எழத் தொடங்கியிருந்தன. குறிப்பாக, ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ, இந்த தடைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடுத்து, அதனை விசாரிப்பதற்கான தீர்ப்பாயமும் அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சூழலில் விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கையில் அடியோடு அழிக்கப்பட்டுவிட்ட போதும் அதன் மீதான தடையை நீடிப்பதற்கு ஒரு காரணத்தைக் கூற வேண்டிய தேவை இந்திய மத்திய உள்துறை அமைச்சுக்கு ஏற்பட்டிருந்தது.

இலங்கையில் செயற்படும் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் கொண்டுள்ளது. எல்லாத் தமிழர்களுக்குத் தனித்தாயகம் (தமிழீழம்) என்ற இதன் கோட்பாடு, இந்தியாவின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலானது. இலங்கையில் 2009 இல் விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டுவிட்ட போதிலும், ஈழம் என்ற அதன் கோட்பாடு கைவிடப்படவில்லை. ஈழக் கோட்பாட்டை அடைய, ஐரோப்பாவில் இரகசியமாக நிதிசேகரிப்பு மற்றும் பிரசாரங்களில் ஈடுபடுகிறது. எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்கள், போராளிகள், உள்ளூரிலும், வெளிநாடுகளிலும், மீண்டும் ஒன்றிணைய முனைகிறார்கள். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்கு இந்திய அரசியல் தலைவர்களும், கொள்கை வகுப்பாளர்களுமே காரணம் என்று புலம்பெயர் தமிழர்கள் இணைய ஊடகங்களில் பிரசாரம் செய்து வருகின்றனர். இணையம் மூலமான இத்தகைய பிரசாரங்களால் இந்தியாவில் மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். அண்மைக்காலங்களில் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் எஞ்சிய போராளிகளின் செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன என்று தடைநீடிப்புக் காரணம் கூறியிருந்தது மத்திய உள்துறை அமைச்சு. ஆனால், இந்த முறை, இந்த தடையை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்புச் செய்திருப்பதற்கான காரணம் என்னவென்று மன்மோகன்சிங் தலைமையிலான அரசாங்கம் எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை.

மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்தின் கடைசி, வாழ்நாள் காலத்தில்தான் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்திய நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலின் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாக, 24 மணி நேரம்கூட இல்லாத நிலையில்தான், புதுடெல்லி இந்த அறிவிப்பை வெளியிட்டது. இது முற்றிலும் அரசியல் ரீதியான நடவடிக்கை என்பதுடன்– காங்கிரஸ் அரசாங்கத்தின் பழியுணர்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளது. ஏனென்றால், இதற்கு முன்னர், விடுதலைப் புலிகள் பலமாக இருந்தபோதுகூட, எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஐந்து ஆண்டுகளுக்கு தடை நீடிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. திடீரென, தமது ஆட்சியின் கடைசி நாட்களில், காங்கிரஸ் அரசாங்கம், 5 ஆண்டுகள் தடை நீடிப்புச் செய்துள்ளதில் நிச்சயம் அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகள் மீதான இந்தியாவினது இந்தத் தடை பெரிதாக எந்த விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. இராணுவ ரீதியாக இலங்கையில் அடியோடு அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், இந்தியாவில் தடை நீக்கப்பட்டுவிட்டாலும் கூட, விடுதலைப் புலிகள் இயக்கத்தினால், வலுப்பெற முடியாது. ஏனென்றால், அதன் தலைமைத்துவக் கட்டமைப்பு அடியோடு பெயர்க்கப்பட்டுவிட்டது. விடுதலைப்புலிகளின் தலைவர், வே.பிரபாகரன் உள்ளிட்ட அதன் தலைமைத்துவக் கட்டமைப்பு முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதை, சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் பின்னர், அதன் தலைமைத்துவத்துக்காக வெளிநாடுகளில் போட்டியிட்டனர் என்பது உண்மை. ஆனால், இப்போது அவர்களும் கூட அடக்கி வாசிக்கவே முனைகின்றனர்.

விடுதலைப்புலிகள் மீது தடை நீக்கப்பட்டாலும்கூட வெளிப்படையாக முன்வந்து அதற்குத் தலைமை தாங்க எவரும் தயாராகவும் இல்லை. அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையில் தமிழ் மக்களும் இல்லை என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில், இந்தியாவில் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் மீதான தடை, எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஆனால், இந்தத் தடை நீடிப்பு காங்கிரஸ் அரசாங்கத்தின் பழியுணர்ச்சியை, தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆட்சிமாற்றம் ஏற்படப் போகிறது என்று தெளிவாகத் தெரிந்த நிலையில்தான், இந்த ஐந்தாண்டுத் தடையை காங்கிரஸ் அரசாங்கம் பிறப்பித்தது. அடுத்த அரசாங்கம் பதவிக்கு வர முன்னர், தடை நீடிப்பு அறிவிப்பை வெளியிடுவதானால், வழக்கம் போலவே, இரண்டு ஆண்டுகளுக்கு தடையை நீடித்து அறிவிப்பை வெளியிட்டிருக்கலாம். ஆனால் ஆட்சியின் கடைசி நாட்களில் ஐந்து ஆண்டுகளுக்குதடை நீடிக்கப்பட்டது. ஏனென்றால், அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, புதிய அரசாங்கம் பதவியேற்கும் வரை இந்த தடை நீடிக்க வேண்டும் என்பதுதான்.

பா.ஜ.க. அரசாங்கம் பதவியேற்றால், சிலவேளைகளில், விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீடிக்காமல் விடக்கூடும் என்ற அச்சம், காங்கிரஸ் அரசுக்கு ஏற்பட்டதாலேயே இந்த முடிவை எடுத்துள்ளது.

பா.ஜ.க. அரசாங்கம், விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க முனையாது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தடை நீடிப்புச் செய்யும் காலமுறை வரும் போது நீடிப்புச் செய்யாமல் ஒதுங்க முடியும்.

அது சர்ச்சையை ஏற்படுத்தாது. ஆனால், தடை அறிவிப்பை இரத்துச் செய்ய முயன்றால் அது அரசியல் ரீதியான சர்ச்சையை ஏற்படுத்தும். இதனால்தான் அடுத்த பதவியேற்கும் அரசாங்கத்தின் காலத்துக்கும் சேர்த்து, தடையை நீடித்துள்ளது மன்மோகன்சிங் அரசாங்கம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட வேண்டும் என்பதில், இந்தியா உறுதியோடு இருந்தது என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான், போரில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டபோதும், காங்கிரஸ் அரசாங்கம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் மீதான தடை விடயத்தில் மட்டுமின்றி, ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டவர்களின் விடுதலைக்கு எதிராக நடந்துகொண்ட விதத்திலும், காங்கிரஸ் அரசின் பழியுணர்ச்சி ஏற்கனவே வெளிப்பட்டிருந்தது. அதேவேளை, மன்மோகன்சிங் அரசாங்கம், விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பு விவகாரத்தில் மட்டுமின்றி, இந்திய இராணுவத் தளபதி நியமனத்திலும் குழப்பங்களை ஏற்படுத்திவிட்டே செல்கிறது.

அடுத்த இந்திய இராணுவத் தளபதியாக, லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுக்காவை, கடைசி அமைச்சரவைக் கூட்டத்தில் நியமித்துள்ளது மன்மோகன்சிங் அரசாங்கம். இதற்கு பா.ஜ.க. கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

இராணுவ ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்ட ஒருவர், பதவி உயர்வுக்குத் தடை விதிக்கப்பட்ட ஒருவரை, இராணுவத் தளபதியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும், அதுவும் மன்மோகன்சிங் அரசின் கடைசி நாட்களில் இதற்கான முடிவு எடுக்கக்கூடாது என்றும் கடுமையாக எதிர்த்தது.

இன்னொரு நாடாளுமன்றத்துக்கான தேர்தல் முடிந்துவிட்ட நிலையில்– அதில் மக்கள் அளித்த ஜனநாயக தீர்ப்பு என்னவென்று வெளிவருவதற்குமுன்னர், கொள்கை ரீதியான முடிவை எடுக்கும் அதிகாரம் இல்லை என்ற போதிலும் இராணுவத் தளபதி நியமன விவகாரத்திலும் குழப்பம் விளைவித்துள்ளது மன்மோகன்சிங் அரசாங்கம்.


இந்திய இராணுவத் தளபதி நியமன விடயத்திலேயே இவ்வாறு நடந்துகொண்ட இந்திய மத்திய அரசு. விடுதலைப் புலிகள் மீதான தடை விவகாரத்தில் இவ்வாறு நடந்து கொண்டதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அதேவேளை, தமிழரின் அரசியல் போராட்டம், விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து கைமாற்றப்பட்டு ஐந்து ஆண்டுகளாகிவிட்ட நிலையிலும் அதன் மீது தடையை நீடித்து திருப்திப்பட்டுக் கொள்ளும் நிலையில்தான் உலகம் உள்ளது. இதனை செத்த பாம்பை அடித்து திருப்திப்பட்டுக் கொள்பவர்களின் செயலுக்கே ஒப்பாக கூற முடியும்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

# 15.05.2014–14.06.2014



## கும்பம்

## வழிபாட்டால் வளர்ச்சி கூடும்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**உற்சாகத்துடன் செயற்பட்டு வெற்றி பெறும் கும்ப இராசிநேயர்களே!**

**வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நேரம்!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அது மட்டுமல்ல அஷ்டமத்தில் செவ்வாயும் சஞ்சரிக்கிறார். எனவே, எதிலும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகள் அதிகரிக்கும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும்.

சகாய ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்களின் பகை உருவாகலாம். உள்ளத்தில் இனம் புரியாத கவலை மேலோங்கும். கூட்டு முயற்சிகளில் மாற்றம் செய்வீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் ஸ்தம்பித்து நிற்கும். தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற தெய்வ வழிபாடுகள் கை கொடுக்கும்.

குறிப்பாக ராசிநாதன் சனி உச்சம் பெறும் இந்த நேரத்தில் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இல்லத்தில் ராமஜெயம் எழுதுவது நல்லது. அஷ்டமத்துச் செவ்வாய் மாறும் வரை முருகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

3, 10 இற்கு அதிபதியான செவ்வாய் அஷ்டமத்தில் வலுப்பெறும்பொழுது, தொழிலில் தொய்வு நிலை ஏற்படும். வாங்கல்-கொடுக்கல்களில் வளர்ச்சிக்கு மத்தியில் தளர்ச்சியும் குடிகொள்ளும். எண்ணங்களை எளிதில் செயலாக்க இயலாது. விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். உடன் பிறப்புகளின் வழியே ஒற்றுமை குறையும். வாங்கிய இடத்தை விற்க நேரிடுகிறதே என்று ஒருசிலர் கவலைப்படுவர்.

தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் தக்க வைத்துக்கொள்வது நல்லது. அங்காரக ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவதன் மூலமும், செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவதன் மூலமும் சில பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

சப்தமாதிபதி 4இல் சஞ்சரிப்பது நன்மை தான். சுபச்செலவுகள் கூடும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதினால் வீண் விரயங்களை சுபவிரயமாக்கிக் கொள்ள இயலும்.

**மேட சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 24 ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3இற்கு அதிபதி 3இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் முன்னேற்றம் அதிகரிக்கும். முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடிவந்து வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். நல்லவர்களின் தொடர்பால் புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு அஸ்திபாரமிடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

மே 27ஆம் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். பஞ்சமாதிபதி வக்ரம் பெறும் பொழுது, பிள்ளைகளால் தொல்லைகளும், செலவினங்களும் உருவாகும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையில் இருக்கும். அதே நேரத்தில் அஷ்டமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் சென்ற மாதத்தில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். இட மாற்றம், ஊர் மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

ஜூன் 13 ஆம் திகதி ரண, ரோக, ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அதிலும் 6 ஆம் இடத்தில் உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் 2, 11இற்கு அதிபதியாக குரு விளங்குவதால் வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய அதைக் கொடுத்து விடுவீர்கள். எனவே கடன் சுமை குறையும். குடும்ப உறுப்பினர்களையும், தொழில் கூட்டாளிகளையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது.

இம்மாதம் அனுமன் வழிபாடும், பெண் தெய்வ வழிபாடும் இனிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டிய மாதமாகும். கொடுக்கல்-வாங்கல்களில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். மாதத் தொடக்கத்தில் தங்கம், வெள்ளி மற்றும் மின்சாதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். 8இல் செவ்வாய் சஞ்சரிக்கும் வரை சற்று பொறுமை தேவை. எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துச் செல்வது நல்லது. விநாயகர் வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும்.

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

## இனிய பலன்கள் நடைபெறும் நேரம்!

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**துணையாக இருப்பவர்களுக்கு தோள் கொடுத்து உதவும் மீன இராசிநேயர்களே!**

**இனிய பலன்கள் நடைபெறும் நேரம்!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் விரயங்கள் அதிகரிக்கும் விதத்தில் கிரக நிலைகளின் ஆதிக்கம் இருக்கிறது. குறிப்பாக அஷ்டமாதிபதி உச்சம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் எதையும் ஒரு முறைக்கு இரு முறை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். லாபம் வந்த மறு நிமிடமே செலவாகி விடும்.

அஷ்டமத்துச் சனி வக்ரம் பெறுவது யோகம் தான். என்றாலும், அஷ்டமாதிபதி சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதால் நிதானத்துடன் செயற்பட்டாலே நிம்மதி கிடைக்கும். அதே நேரத்தில் தனாதிபதி செவ்வாய் உங்கள் ராசியைப் பார்ப்பதால் வருமானம் திருப்திகரமாக இருக்கும். மாதத் தொடக்கத்தில் சூரியனும், புதனும் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார்கள். அதை பஞ்சம ஸ்தானாதிபதி சந்திரன் பார்க்கிறார்.

எனவே பிள்ளைகளைப் பற்றிய கவலை மேலோங்கும். அதன் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்களில் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். ஒரு பக்கம் கடன் சுமை குறைந்தாலும், மற்றொரு பக்கம் புதிய கடன்கள் முளைத்துக் கொண்டேயிருக்கும்.

2 இல் கேதுவும், 8 இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் உங்கள் ஜாதகம் இருக்கிறது. எனவே, சர்ப்ப சாந்திகளை யோகபலம் பெற்ற நாளில் செய்து யோகத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். நூதனப் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். இந்த மாதத்தில் வீட்டில் உபயோகப்படுத்தும் பொருட்கள் பலவற்றையும் கொடுத்துவிட்டு புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மாதக் கடைசியில் குருப்பெயர்ச்சியாகி உச்சம் பெற்ற குரு உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். எனவே மிச்சம் வைக்கும் அளவு பொருளாதார நிலை உயரும். மிகச் சிறந்த பலன்களை குரு பகவான் வாரி வழங்குவார். எனவே, வியாழக்கிழமை விரதமிருந்து குரு பகவானை வழிபாடு செய்வது நல்லது. திசைமாறிய தென்முகக் கடவுள் வழிபாடு உங்களுக்குத் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுக்கும்.

**மேட சுக்ரனின் சஞ்சாரம்!**

மேட இராசியில் சுக்ரன் மே 24 ஆம் திகதியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். வியாபார விரோதங்கள் விலகும். நீண்ட நாள் வழக்குகள் நல்ல முடிவிற்கு வரும். வங்கிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கிடைத்து மகிழ்ச்சியடைவர்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

4, 7 இற்கு அதிபதியான புதன், மே 27 முதல் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ரம் நன்மையையே வழங்கும். குறிப்பாக தாய் வழி ஆதரவு பெருகும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் ஒன்றிரண்டு வெற்றி பெறும். விட்டுப்போன வரன்கள் மீண்டும் வந்து வியக்க வைக்கும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். கடல் தாண்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து தொழிலை வளப்படுத்த முன்வருவர். பயணங்கள் அதிகரிக்கும்.

**கடக குருவின் சஞ்சாரம்!**

கடக ராசியில் ஜூன் 13 ஆம் திகதியில் குரு உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக உங்கள் ராசி மேலும் புனிதமடைகின்றது. எனவே, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பொது நலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். வீடு கட்டும் முயற்சியில் அனுகூலம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர் பதவி கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இம்மாதம் ராகு-கேதுக்களை முறையாக வழிபட்டு நன்மைகளை வரவழைத்துக்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் 2 இல் சஞ்சரிக்கும் கேதுவால் இடையூறுகள், குடும்ப பிரச்சினைகள் வந்து கொண்டேயிருக்கும். எதிலும் தீவிரம் காட்ட வேண்டாம். வாங்கிய சொத்தை விற்க நேரிடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. குடும்பத்தில் கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வதே நல்லது. பிள்ளைகளால் மாதத்தின் மையப்பகுதியில் விரயம் ஏற்படலாம். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள். அனுமன் வழிபாடும், பெருமாள் வழிபாடும் உங்களுக்கு அமைதியை வரவழைத்துக் கொடுக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் பாலத்தை அமைத்து போக்குவரத்தை இலகுபடுத்துக

(முல்லைத்தீவு)


வடக்கு, கிழக்கை இணைக்கும் கொக்கிளாய் கடல் நீரேரிக்கு பாலம் அமைத்து போக்குவரத்தை இலகுவாக்குமாறு மக்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொக்கிளாய் கடல் நீரேரியில் பாலத்தை அமைத்தால் முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கான போக்குவரத்தை இலகுபடுத்த முடியும்.

எனினும் யுத்தத்திற்கு முன்னரும் மீள்குடியேற்றப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பாலம் அமைப்பதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டவில்லை.

இந்நிலையில் முல்லைத்தீவு, நாயாறு, வெலிஓயா, அநுராதபுரம், புல்மோட்டை ஊடாகவே திருகோணமலையை சென்றடைய வேண்டியுள்ளது.

இதனால் 165 கிலோமீற்றர் தூரத்தினைக்கடக்க 5 மணித்தியாலங்கள் முந்நூறு ரூபா கொடுத்து பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



எனினும் பி-297 வீதிக்கும் பி-60 வீதிக்குமிடையிலே கொக்கிளாய் கடல் நீரேரி காணப்படுகின்றது.

இக் கடல் நீரேரி 1 1/2கிலோ மீற்றர் தூரத்தையே கொண்டுள்ளது.

என்வே கொக்கிளாய் கடல் நீரேரியில் பாலத்தை அமைக்கும் பட்சத்தில் இலகுவாக 110 கிலோ மீற்றர் வரையே போக்குவரத்துச் செய்ய வேண்டிய தேவை ஏற்படும்.

அத்தோடு பாலம் அமைக்கப்பட்டால் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டு முல்லைத்தீவு நகரம் கேந்திர நிலையமாக மாற்றப்பட வாய்ப்புள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அரசாங்கத்தினர் கொக்கிளாய் பாலத்தினை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்மென மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பதுளை, மொனறாகல, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் யாழ். மாவட்டத்திற்கு வருகை தருவதற்கு குறுகிய பாதை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (9-267)

# மாங்குளத்தில் பொது நூலகத்தை அமைக்குமாறு கோரிக்கை

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழுள்ள மாங்குளத்தில் மக்கள் மீள்குடியேறி 5 வருடங்கள் கடந்த நிலையில் பொது நூலகம் அமைக்கப்படாமையால் நூலகத்தை நாடுபவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் கிராமத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின் சனசமூக நிலையங்களோ பொது நூலகமோ இதுவரை அமைக்கப்பட வில்லை.

பொதுக் கட்டடங்கள் சிலவுள்ள போதிலும் அவற்றில் பத்திரிகைகள் கூட வைக்கப்படுவதில்லை.

இக் கட்டடங்களில் ஒன்றில் இராணுவத்தினர் கணனி பயிற்சி நெறியை நடத்தி வருகின்றனர்.

பொது நோக்கு மண்டபத்தினை கிராமிய மருத்துவ மாதுக்கள் சுகாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் புலவன்குளம், பனிச்சன் குளம், மாங்குளம், ஒலுமடு, கருப்பட்டமுறிப்பு, தச்சடம்பன் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் தமது அறிவுத் தேடலை மேற்கொள்ளமுடியாது திண்டாடுகின்றனர்.

எனவே, புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் இவ் விடயம் தொடர்பில் கவனமெடுத்து, மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள பொது நூலகத்திற் குரிய காணியில் நூலகமொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (9-15)

# இளைஞர்கள் அட்டகாசம் அதிகரிப்பு; பொலிஸார் அசமந்தப் போக்கு

(குருமன்காடு)

வவுனியா வைரவப் புளியங்குளம் வைரவ கோயில் வீதியில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக கிராம மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

அண்மைக்காலமாக குறித்த பகுதியில் இளைஞர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் வீதியில் பெண்கள் செல்ல முடியாதுள்ளதுடன் தகாத வார்த்தை பிரயோகங்களை எதிர்கொள்ள வேண்டியுமிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் கல்வி நிலையங்களுக்கு முன்பாக சில இளைஞர்கள் கூடி நின்று படிக்க வருகின்ற மாணவிகளுடன் சேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் கல்வி செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, இளைஞர்களுக்கிடையே குழு மோதல்களும் இடம் பெற்று வருகின்ற போதிலும் பொலிஸார் அசமந்தப்போக்கில் செயற்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (9-250)

# ஒட்டுசுட்டானில் 249 பேர் கணவனை இழந்துள்ளனர்

(மல்லாவி)


ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 26 கிராம சேவையாளர் பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் 5 ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 406 அங்கத்தவர்கள் இதுவரை வசித்து வருகின்றனர்.

இவர்களில் மாற்றுவலுவுடையோர், கணவனை இழந்தோர், முதியவர்கள் தொடர்பான விபரங்களை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரதிச் செயலாளர் எஸ்.குருபரன் அறிவித்துள்ளார்.

இதன்படி 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான புள்ளி விபரத் தகவலின்படி மாற்றுத்திறனாளிகள் 376 பேரும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் ஆயிரத்து 675 பேரும் கணவனை இழந்து பெண்களைத் தலைமையாகக் கொண்டவர்கள் 881 பேரும் உள்ளனர். இவர்களில் யுத்தத்தின் போது கணவனை இழந்தவர்கள் 249 பேர் ஆகும்.

அத்தோடு கணவனால் கைவிடப்பட்டவர்கள் 144 பேர் காணப்படுகின்றனர். இதேவேளை, மனைவியை இழந்த தபுதாரர்களை தலைமையாகக் கொண்டவர்கள் 204 பேரும் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-15)

# முல்லைத்தீவு சிறுவர் பூங்காவில் மலசலகூட வசதிகளை ஏற்படுத்துக



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்கரை சிறுவர் பூங்காவில் மலசலகூடம் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச் சிறுவர் பூங்கா கரைதுறைப் பற்று பிரதேச சபையின் கீழுள்ளதால் 15 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சிறுவர்களே இப் பூங்காவை பயன்படுத்தி வருகின்றனர்.

இப் பூங்கா யு.எஸ்.ஏ.ஐ.பி. என்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இப் பூங்கா காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை சிறுவர்களின் பாவனைக்கு விடப்படுகின்றது.

பூங்காவை பயன்படுத்துவதற்காக இங்கு வருகின்ற சிறார்களிடம் கட்டணம் அறவிடப்படுகின்றது.

எனினும் மலசலகூட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படாமையினால் சிறார்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே மலசலகூட வசதிகளை இங்கு ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

# துணுக்காய் வலயத்தின் நாட்டுக்கூத்து முடிபுகள்

(மல்லாவி)

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் வலய மட்ட ரீதியில் நடத்தப்பட்ட நாட்டுக்கூத்து போட்டிகளில் முதல் மூன்றிடங்களைப் பெற்ற பாடசாலைகளின் பெயர்களை வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

முல்லை மோடி (கோவலன் கூத்து)

முதலாமிடம்: மு/ஒட்டுசுட்டான் ம.வி.

(விசேட கூத்து)

முதலாமிடம்: மு/பாண்டியன் குளம் ம.வி.

இரண்டாமிடம்: மு/யோகபுரம்ம.வி.

சிந்து நடைக் கூத்து (காத்தவராயன்)

மு/மாங்குளம் ம.வி., மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை.,மு/ஐயங் கன் குளம் அ.த.க.பாடசாலை.

மூன்று நிகழ்வுகளிலும் முதலிடத்தை பெற்ற பாடசாலைகளை மாகாண மட்டப் போட்டிகளுக்கு தயார்ப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (9-15)



# வடக்கில் சிங்கள குடிப்பரம்பலை அதிகரித்து எதிர்கால அரசியலுக்கு பயன்படுத்த திட்டம்

(குருமன்காடு)

வடக்கில் சிங்கள மக்களின் குடிப்பரம்பலை அதிகரிக்கும் நோக்கில் ஆயிரத்து 218 சிங்களக் குடும்பங்களை மன்னாரில் குடியேற்றுவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொண்டச்சி பாசித்தென்றல் கடற்கரையோரமாக சிங்களக் குடும்பங்களுக்காக கட்டப்பட்டுவரும் வீடுகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சாடியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தினைச் சேர்ந்த தமிழ் மக்களின் வீடுகளை கடற்படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் காடுகளுக்குள் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் ஜனாபதியின் நெருக்கத்துக்குரியவராக கூறப்படுகின்ற மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முழுமையான இராணுவ ஆளணியினரால் பாசித்தென்றல் கிராமத்தில் கொக்குப்படையான் தொடக்கம் ஆலம்வில் வரையான பகுதியில் ஆயிரத்து 218 சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் முதற் கட்டமாக ஐந்நூறு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென ஜனாதிபதி விசேட செயலணியினால் 560 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வெளியார் எவரும் சென்று பார்வையிடக்கூட முடியாத நிலையில் முழுமையான இராணுவத்தினரே அனைத்து கட்டுமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் திட்டமிடப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றத்தினை முழுமையாக முன்னெடுக்கும் பட்சத்தில் அங்கு குடியேறும் 4 ஆயிரத்து 300 சிங்கள வாக்காளர்களை எதிர்கால அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தும் உள் நோக்கமும் உணரப்பட்டுள்ளது.

வடக்கில் சிங்கள மக்களின் குடிப்பரம்பலை அதிகரிக்கும் நோக்கில் ஆயிரத்து 218 சிங்களக் குடும்பங்களை மன்னாரில் குடியேற்றுவதற்கான நடவடிக்கையினை உடனடியாகக் கைவிட்டு தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து அவர்கள் வாழ்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (9-250)

# பொங்கல் விழா

(மல்லாவி)


மாந்தைகிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லிருப்பு கண்ணகை அம்மன் வைரவர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஜூன்மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்படி அன்றைய தினம் பகல் அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று இரவு பண்டமெடுப்புடன் சுவாமி வீதியுலா வந்து அதிகாலை பொங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையை விட வடக்கு இராணுவத்தை குறைப்பதே முக்கியம்

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு



வடக்கிற்கு மாகாண சபை கிடைத்த போதிலும் அங்கு வன்முறை நிலைமைகளில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகளில சிறு பகுதியாவது செயற்படுத்தப்படவில்லை.

இது சம்பந்தமாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் விவாதத்திற்கும் தயாராக இருக்கின்றேன்.

சர்வதேச விசாரணையை தவிர ஏனைய பரிந்துரைகளை செயற்படுத்துவதாக ஜனாதிபதி கூறுவாரேயானால், அதனை இந்த மாத முடிவிற்குள் மேற்கொள்ள வேண்டும்.

வாக்குறுதியை தாண்டி சென்று அதனை அமுல்படுத்த வேண்டும். சர்வதேச விசாரணையை விட வடக்கில் இருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைப்பதே மிகவும் முக்கியமானது.

அரசாங்கம் சுவீகரித்துள்ள மக்களுக்கு சொந்தமான நிலங்கள் அவர்களிடம் மீள கையளிக்கப்பட வேண்டும்.

மீள்குடியேற்றத்தை நிறைவு செய்ய வேண்டும். வடக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங் களை வழங்க வேண்டும். இந்த விடயங்களை உடனடியாக செயற்படுத்த வேண்டும்.

மேற்படி காரணங்களினால் வடக்கில் உள்ள மக்கள் கடும் அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பிரச்சினைகளை தீர்க்கும் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளுக்கும் அரசாங்கம் தயாராக இல்லை.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு முரணாகவே அரசாங்கம் செயற்படுகிறது எனவும் அவர் கூறியுள்ளார். (2)

## 2013 பாதீட்டின் படி காணிகளை கைமாற்ற தடை விதிப்பு

உள்நாட்டவர்கள் வெளிநாட்டவர்களுக்கு காணிகளை கைமாற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பாதீட்டின் அடிப்படையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி தனியார் மற்றும் அரச காணிகள் வெளிநாடுகளுக்கு வழங்கு வதற்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான நடைமுறையை சட்டரீதியானதாக மாற்றும் வகையிலான சட்டத்திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர், கைமாற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (2)

# வான்பாலத்தை தகர்க்க கோபி திட்டமிட்டிருந்தார்

(கொழும்பு)

தெஹிவளை வான் பாலத்தை தகர்ப்பதற்கு கோபி திட்டமிட்டிருந்தார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த கோபி உள்ளிட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் தெஹிவளை வான் பாலத்தை தகர்க்கத் திட்டமிட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்த திட்டம் தெரியவந்ததாம்.

வான் பாலத்தை பயன்படுத்தும் அரசியல்வாதிகள் குறித்து கண்காணிக்குமாறு கோபி, புனர்வாழ்வு அளிக்கப்படாத புலி உறுப்பினர் ஒருவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த புலி உறுப்பினர் தெஹிவளை பிரதேச பேக்கரி ஒன்றில் கடமையாற்றியுள்ளார்.

அங்கிருந்தவாறு தகவல்களை திரட்டி வந்த குறித்த நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# நாட்டையும் சமூகத்தையும் சீரழிக்கும் பணத்தால் பயனில்லை

## அமைச்சர் பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் ஆளும் கட்சியில் இருபபதாக மத்திய மாகாண அமைச்சர் பிரமீத் பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கலேவல பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

போதைப் பொருள் மற்றும் எதனோல் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்வோரே அரசாங்கத்தை அதிகம் தாக்குகின்றனர்.

அவ்வாறு சட்டவிரோதமான முறையில் கடத்தல்களில் ஈடுபடும் ஒரு சிலர் ஆளும் கட்சியிலும் அங்கம் வகிக்கின்றனர்.

நாட்டையும் சமூகத்தையும் சீரழித்து கிடைக்கும் பணத்தில் பயனில்லை.

பணம் இருக்கும் காரணத்தினால் சிறந்த பௌத்தராக முடியாது. பௌத்த மதக் கோட்பாடுகளை பின்பற்றுவதன் மூலமே சிறந்த பௌத்தனாக முடியும்.

நல்ல பண்புகளை கொண்ட சமூகமொன்றை கட்டியெழுப்புவதே முதன்மையானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இலங்கை போர்க்குற்ற நாடு; ஒத்துழைப்பு வழங்கவேண்டாம்

## நியூசிலாந்து அரசுக்கு பசுமைக்கட்சி அழுத்தம்

யுத்தக் குற்றங்களை புரிந்த இலங்கை அரசாங்கத்துடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதன் ஊடாக நியூசிலாந்து அரசாங்கமும் குற்றச் செயலில் ஈடுபடுவதாக அந் நாட்டின் பசுமைக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளதாக கட்சியின் மனிதவுரிமைகள் தொடர்பான பேச்சாளர் ஜேன்லோகி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் மரே மெக்கலி மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் ஒக்லாண்டில் வைத்து சந்தித்துக் கொண்டனர்.

இதன் போது இருவருக்கும் இடையில் இரகசிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் பல்வேறு யுத்தக் குற்றங்களை புரிந்துள்ளது.

இந்த நிலையில் அந்த நாட்டின் அபிவிருத்திக்கு வர்த்தக ரீதியாக ஒத்துழைப்பு வழங்குவது, நியூசிலாந்து மேற்கொள்கின்ற குற்றச் செயல் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜேன்லோகி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையில் செய்தியாளர் சந் திப்பு ஒன்றை நடத்த முற்பட்ட வேளையில், பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் நாடு கடத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# கொலன்னாவ நிகழ்வுகளில் ஹிருணிகா பங்கேற்கக்கூடாது

## துமிந்த எம்.பி கொதிப்பு

மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர கொலன்னாவ பிரதேசத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்கக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

வெல்லம்பிட்டிய பிரதேச பாடசாலையொன்றின் அங்குரார்ப்பண நிகழ்வில் அதிதிகள் தெரிவு தொடர்பில் நடைபெற்ற கூட்டத்தில் அண்மையில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஹிருணிகா பங்கேற்கும் நிகழ்வுகளில் பங்கேற்க முடியாது.

கொலன்னாவ பிரதேச தேர்தல் தொகுதி அமைப்பாளர் நானே. எனது தீர்மானத்திற்கு அமையவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் ஹிருணிகாவை பங்கேற்கச் செய்ய முடியாது என துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும், அண்மையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் இருவரும் அருகருகில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி ரங்கநாதன் புஷ்பராணி

பர்மாவை பிறப்பிடமாகவும் யாழ்.தெல்லிப்பழை, கனடா Toron to, Ontario ஆகிய இடங்களை வசிப் பிடமாகக் கொண்ட ரங்கநாதன் புஷ்பராணி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு Elgin,Mills Cemetery 1591 Elgin Mills E Richmond Hill,ON L4S 1M9,Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சபாரட்ணம் மகேஸ்வரி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Dortmund ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் மகேஸ்வரி கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு Am Gottesacker 25, 44143, Hauptfriedhof, Dortmund, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### பொன்னுத்துரை பாலிதராஜா

மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Biel/Bienne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலிதராஜா கடந்த 17 ஆம் திகதி சனிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு Friedhof Madretsch, Bruggstrasse 121, 2503 Biel, Switzerland என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி பொன்னுத்துரை நாகேஸ்வரி

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் இந்தியா மடிப்பாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாகேஸ்வரி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கிருஷ்ணன் ஆனந்தகுமார்

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு, செல்வபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் ஆனந்தகுமார் (உரிமையாளர் மோட்டார் ஊர்தி திருத்தகம் கோப்பாய்,உரும்பிராய்) கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலம்பியாவில் பேருந்தில் தீ விபத்து; குழந்தைகள் உட்பட 30 பேர் பலி



(கொலம்பியா)

லத்தின் அமெரிக்காவின் ஒரு பகுதியான கொலம்பியாவில் ஓடும் பஸ் ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிக்கி 30 பயணிகள் பலியாகினர்.

கரிபியன் கடலோரப் பகுதியான பொகோட்டா நகரில் இருந்து சுமார் 750 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஃபண்டாசியன் என்ற நகரின் சாலையில் அந்த பஸ் சென்ற போது திடீர் என்று தீப்பற்றியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் மளமளவென்று பரவிய தீயில் சிக்கி 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பலர் உட்பட 30 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.


கடுமையான தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட 18 பயணிகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

பஸ்சில் பயணித்த அனைவரும் ஃபண்டாசியன் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

இந்த கோர விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார், விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

# தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பு; முதல்வர் ஜெயாவிடம் மோடி உறுதி



(சென்னை)

புதிதாக மத்தியில் பொறுப்பேற்கும் அரசு, தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் என பாஜக பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, முதல்வர் ஜெயலலிதாவிடம் உறுதியளித்தார்.

முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்த்துக்கு நன்றி தெரிவிப்பதற்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் தொலைபேசியில் பேசிய மோடி இதை தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. மகத்தான வெற்றி பெற்றதற்காக பாஜகவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்து ஜெயலலிதா கடந்த சனிக்கிழமை கடிதம் எழுதினார்.

இந்தக் கடிதத்துக்கு நன்றி தெரிவிப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதல்வர் ஜெயலலிதாவிடம் நரேந்திர மோடி தொலைபேசியில் பேசினார்.

அவர் பேசும்போது, முதல்வரின் கடிதத்துக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அதோடு, தமிழகத்தில்மக்களவைத் தேர்தலில் அதிமுக சிறப்பான வெற்றி பெற்றதற்காக ஜெயலலிதாவுக்கு வாழ்த்துகளைக் கூறினார்.

இந்தியாவின் பிரதமராக மோடி வெற்றிகரமாக செயலாற்ற ஜெயலலிதாவும் தனது வாழ்த்துகளைக் கூறினார்.

அபபோது, புதிதாக பொறுப்பேற்க உள்ள மத்திய அரசுக்கும், தமிழகத்துக்கும் இடையே முழுமையான ஒத்துழைப்பு இருக்கும் என ஜெயலலிதாவிடம் நரேந்திர மோடி உறுதியளித்ததாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் சிரியா விமானப்படை தளபதி பலி

(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டில் விமானப்படை முகாம் மீது கிளர்ச்சியாளர்கள் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் விமானப்படையின் தலைமைத் தளபதி கொல்லப்பட்டார்.

இது குறித்து சிரியா விமானப் படை உயர் அதிகாரி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

எம்லேய்ஹா என்ற நகரின் அருகே அமைந்துள்ள விமானப் படை முகாம் மீது நுஸ்ரா முன்னணி என்ற அல்கொய்தா ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கடந்த சனிக்கிழமை திடீரென தாக்குதல் நடத்தினர்.

நுஸ்ரா முன்னணியினரும் மேலும் சில தீவிரவாத இயக்கத்தினரும் இணைந்து ரொக்கெட் குண்டுகளை வீசினர்.

இதில் படுகாயமடைந்த விமானப்படை தலைமைத் தளபதி ஹுசைன் இஷாக் உயிரிழந்தார் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தகவலை அந்நாட்டில் செயற்பட்டுவரும் பிரிட்டனைச் சேர்ந்த மனிதவுரிமைகள் கண்காணிப்பு தொண்டு நிறுவனமும் உறுதிப்படுத்தியுள்ளது.

சிரியா ஜனாதிபதி பஷார் அல் அஸாதுக்கு எதிராக புரட்சிப் படையினரும், தீவிரவாத அமைப்புகளும் கடந்த ஓராண்டாக நடத்திவரும் இந்தத் தாக்குதலில் ஹுசைன் இஷாக் உயிரிழந்தது அரசு தர ப்புக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# எதிர்க்கட்சி தலைவர் பதவியை ராகுல் காந்தி ஏற்க தயக்கம்

(புதுடில்லி)

பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவுக்கு அடுத்தபடியாக காங்கிரஸ் கட்சி 44 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இதனால் காங்கிரஸ் கட்சி 10 ஆண்டுகளுக்குப் பின்பு எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்கிறது.

பாராளுமன்ற சட்ட விதிகளின் படி மொத்த உறுப்பினர்களில் 10 சதவீத இடங்களைப் பெற்றால்தான் ஒரு கட்சியால் எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற முடியும்.

அந்த வகையில் பார்த்தால், 54 இடங்களில் வெற்றி பெற்றிருந்தால் தான் எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற முடியும்.

காங்கிரஸ் கட்சி 44 இடங்களே வென்றிருப்பதால் அந்த கட்சிக்கு



எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது. எதிர்க்கட்சி தலைவர் பெறும் கேபினட் அந்தஸ்தும் பாராளுமன்ற காங்கிரஸ் தலைவருக்கு கிடைக்காது.

வெறுமனே காங்கிரசார் எதிர் வரிசையில் உட்கார வேண்டியது தான்.

காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலையால் ராகுல்காந்தி மிகவும் அதிருப்தி அடைந்து இருப்பதாக தெரியவந்துள்ளது.

காங்கிரஸ் வீழ்ச்சிக்கு ராகுலும் ஒரு காரணமாவார் என்ற விமர்சனம் அவரை மேலும் வேதனைப் பட வைத்துள்ளது.

இதனால் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் என்ற பதவியில் அமர ராகுல்காந்தி தயங்குகிறார்.

வேறு யாராவது ஒரு மூத்த தலைவரை அந்த பதவிக்கு தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர் கூறிவிட்டார்.

இதையடுத்து எதிர்க்கட்சி தலைவர் பதவியை காங்கிரஸ் எம்.பி.க்களிடம் போட்டி ஏற்பட்டுள்ளது.



சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கிர்கிஸ்தான் ஜனாதிபதி அல்மாஸ்பெக் அட்டம் பாயேவ் (இடது) ஷங்காய் நகரில் சீன ஜனாதிபதி ஷி ஜிங்பிங் உடன் இரு தரப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதனை படத்தில் காணலாம்.

# வடகொரியாவில் கட்டடம் இடிந்து விழுந்ததில் பலர் பலி

(சியோல்)

வடகொரிய தலைநகர் பியாங்யாங்கில் 23 மாடிகளுடன் கூடிய அடுக்கு மாடி கட்டடம் கட்டப்பட்டது.

அதில் ஏற்கனவே 92 குடும்பங்களை சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனர்.

இருந்தும் அதன் மீது தொடர்ந்து கட்டுமான பணி நடந்தததால் பாரம் தாங்காமல் அக்கட்டடம் இடிந்து தரைமட்டமானது.

அதில் சிக்கி பலர் பலியாகினர். ஏராளமானவர்கள் உயிரிழந்தனர்.

ஆனால் இந்த தகவல் வெளி உலகத்துக்கு தெரியாமல் மறைக்கப்பட்டது.

ஆனால் அதை தென் கொரியா வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

அதையடுத்து நடந்த சம்பவத்தை வட கொரியா ஒப்புக் கொண்டுள்ளது.

மேலும் இந்த துயர சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்துள்ளது.

அது குறித்து மூத்த மந்திரி சோபு - 2 ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

அதில், இது வடகொரியாவில் நடந்த கற்பனை செய்து பார்க்க முடியாத மிகப்பெரிய துயர சம்பவமாகும்.

விபத்து நடந்த இடத்துக்கு ஜனாதிபதி கிம் ஜாங் - யங் நேரில் சென்று பார்த்தார்.

இரவு முழுவதும் அங்கு தங்கியிருந்தார். இராணுவம் மற்றும் பொலிஸாரை வரவழைத்து மீட்பு பணிகளை பார்வையிட்டார்.

மக்கள் குடியிருக்கும் கட்டடம் மீது மேலும் கட்டுமான பணி நடப்பதை சரிவர கண்காணிக்கவில்லை.

அதற்காக வருத்தம் தெரிவிக்கிறோம் என அதில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை ஒப்புக் கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். *~ லெனின்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிங்கள மாணவர்களுக்கு ஓர் அன்பு மடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களுக்கு அன்பு வணக்கம்.

நீண்டகாலமாக உங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று அவாவுற்றிருந்தோம். கால சூழ்நிலை இப்போதுதான் பொருந்தி வந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு காலத்தில் தமிழ் மாணவர்கள் தனித்துக் கல்வி கற்கும் இடமாக இருந்தது. இப்போது அந்நிலைமை மாறி விட்டது.

பல்கலைக்கழகம் என்றால் பல கலைகள் மட்டுமல்ல; பல்லினம், சர்வமதம், பல்மொழி உடைய மாணவர்கள் கற்கும் இடமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பல்கலைக்கழகத்திற்கும் சிறப்பு, அங்கு கற்கும் மாணவர்களுக்கும் சிறப்பு என்று எண்ணியிருந்தோம்

அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்பது மகிழ்வுக்குரியதாய் இருந்தது. இந்த மகிழ்வு தனித்து பல்கலைக்கழகம் என்ற எல்லைக்குட்பட்டது மட்டுமல்ல; மாறாக சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் போது, தமிழ் மாணவர்களுடன் ஒரு நல்லுறவு ஏற்படும்.

அதேநேரம் தமிழ் மக்களின் உரிமைசார் நிலைமைகளையும் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். இவ்வாறான சூழ்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்ற சிங்கள மாணவர்கள் தென்பகுதிக்குச் செல்லும் போது, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் பற்றி சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறக் கூடிய சூழமைவு உருவாகும். இதன் ஊடாக இனவாதம் என்ற பேயின் தாண்டவம் தணியும் என்று நம்பியிருந்தோம். ஆனால் எங்கள் நம்பிக்கைகள் வீணாகிப் போயின என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டோம்.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர வந்த நீங்கள் தமிழ் மாணவர்களோடு இணங்கி, இசைந்து, புரிந்துணர்வோடு செயற்பட வேண்டிய நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் வெசாக் கூடுகளைத் தொங்க விட்டு உங்களின் மத வாத சிறுமைத்தனத்தைக் காட்டி விட்டீர்கள். வெசாக் கொண்டாடுவதென்றால் ஒரு சிறிய இடத்தில் அதனை அடையாளப் படுத்தலாம். ஆனால் நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் முழுவதிலும் வெசாக் கூடுகளைக் கட்டியதன் மூலம், விஞ்ஞான பீடத்தின் நுழைவாயில், கலைப்பீடத்தின் முக்கிய இடங்களில் நீங்கள் தொங்க விட்ட வெசாக் கூடுகள் உங்கள் பற்றிய எங்கள் நம்பிக்கைகளைத் தகர்த்து விட்டன.


பல்கலைக்கழகத்தில் படிக்க வந்த நீங்கள் பௌத்த மதத்தை பரப்பவந்தவர்கள் போல செயற்பட்டமை வேதனைக்குரியது.

முள்ளிவாய்க்காலில் முடிந்து போன எங்கள் உறவுகளுக்கான நினைவேந்தல் நடந்து விடக் கூடாது என்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை மூடுவதென்றால், உங்களின் வெளிச்சக் கூடுக்கள் எப்படி அங்கு தொங்க முடியும்? எரியமுடியும்?

உங்களுக்கு வெசாக் என்றால், எங்களுக்கு மே 18 சங்கட சதுர்த்தி. அப்படியானால் பரமேஸ்வரப் பெருமானின் ஆலயத்தில் சங்கட சதுர்த்தி அனுஷ்டிக்கவேண்டுமல்லவா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அன்புக்குரிய சிங்கள மாணவர்களே! நீங்களும் மதவாதிகளாக, இனவாதிகளாக உங்களை அடையாளப்படுத்தாதீர்கள். நல்ல மாணவர்களாக, இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தும் நற்பிரஜைகளாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் என்பது தான் இக் கடிதத்தின் ஊடாக உங்களிடம் நாம் கேட்பது.

# ஆட்சிமுறை குறித்த அமைச்சர்களின் யோசனையை நிராகரித்தார் ஜனாதிபதி



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை இரத்துச் செய்யுமாறு அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, ஜோன் செனவிரட்ன ஆகியோர் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிராகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என நாடு முழுவதும் குரல் கொடுக்கப்பட்டு வரும் நிலையில, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ள தற்போதைய ஜனாதிபதி, தேர்தலுக்கு முன்னர் அப்படியான யோசனை ஒன்றை கொண்டு வரவேண்டும் என இந்த அமைச்சர்கள் யோசனை முன்வைத்திருந்தனர்.

அத்துடன் புதிய தேர்தல் சட்டத்திற்கு அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் இந்த அமைச்சர்கள் அலரி மாளிகையில் வைத்து இந்த மாத ஆரம்பத்தில் யோசனை முன்வைத்திருந்தனர்.

இதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி,

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது பற்றி எந்த கருத்துக்களையும வெளியிடவில்லை எனவும் புதிய தேர்தல் முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக அமையும் எனவும் பழைய தேர்தல் முறையின் கீழேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

தற்போது அமுலில் உள்ள ஜனாதிபதி ஆட்சி முறை குறித்து வெறுப்படைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர், அதிருப்தியுடன் வெளியேறியுள்ளனர். (2)

# தமிழர்களின் ஆன்மாக்கள் கொடுத்த தண்டனையே காங்கிரஸின் தோல்வி

**டி.ராஜேந்தர் தெரிவிப்பு**

(சென்னை)

நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க, காங்கிரஸ் அடைந்த தோல்வி, ஈழத் தமிழர்களின் ஆன்மாக்கள் கொடுத்த தண்டனை என்று இலட்சிய தி.மு.க. தலைவர் டி.ராஜேந்தர் கூறினார்.

சென்னையில் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஈழத்தமிழர்களுக்கு முதல்வர் ஜெயலலிதா காட்டிய ஈடு இணையற்ற அக்கறையே நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெற்றது.

ஈழத்தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசு மற்றும் காங்கிரசுடன் தி.மு.க கைகோர்த்ததனால் ஈழத் தமிழர்களின் ஆன்மாக்கள் கொடுத்த தணடனைதான் நாடாளுமன்ற தேர்தல் தோல்வி.

மத்தியில் 10 ஆண்டுகால ஆட்சியில் தி.மு.க. அங்கம் வகித்தது. காவிரி பிரச்சனை ஆகட்டும், முல்லைப் பெரியாறு பிரச்சினை ஆகட்டும். அவர்கள தமிழகத்திற்காக என்ன செய்தார்கள்.

ஈழத்தமிழர்களின் கண்ணீரை வைத்து நான் அரசியல் செய்ய விரும்பவில்லை என்று நண்பர் விஜயகாந்த் கூறிவிட்டார்.

அ.தி.மு.க தனியாக நின்று வெற்றி பெற்றுள்ளது. ஆனால், ஏனைய கட்சிகள் தனியாக நின்றிருந்தால் சாயம் வெளுத்திருக்கும் என்றார்.

அ.தி.மு.க அரசின் மூன்றாண்டு கால ஆட்சி குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, யாருடைய ஆட்சியாக இருந்தாலும் நல்லதும் - இருக்கும், கெட்டதும் இருக்கும் என்றார். (2)

# அரசாங்கத்தை விரட்டும் காலம் நெருங்கிவிட்டது

**சரத் பொன்சேகா தெரிவிப்பு**

அடக்க முடியாத இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டிய காலம் வந்துள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அரசியல் தலைவர்கள் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர, மக்களை ஏமாற்றி, அவர்களை கொல்லாது கொன்று வருகின்றனர்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு முக்கியத்துவம் வழங்கும் இந்த தலைவர்களை விரட்டியடிக்கும் காலம் வந்துள்ளது. நேர்மையான அரசியல் வாதிகளே எமக்கு தேவை.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனற எமது சிறிய தங்கமான இலஙகை என்ற நாடு, இன்று எவ்வித பலனும் கொடுக்காத நாடாக மாறியுள்ளது.

நாட்டை அழிக்கும் இரத்தத்தை உறிஞ்சும்நபர்களுடன்இந்த பயணத்தை மேற்கொண்டால், நாய்களுடன் உறங்கி செல்களுடன் எழுந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அந்த நிலைமை உருவாகி விட்டது.

கெடுதியான வேலைகளை செய்யும் நபர்களுக்கு அரசியலில் இன்று முன்னுரிமை கிடைத்துள்ளது. வேட்பாளர்கள் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். கொள்ளையர்கள் இன்று அரசியல்துறைக்குள் வந்துள்ளனர்.

நீதி, நியாயத்திற்கு இடமில்லை. நாட்டின் இன்றைய அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டிய தருணம் வந்துள்ளது என்றார். (2)

## இந்தியாவின் புதிய அரசுடன் மீனவர் குறித்து பேசுவோம்

**அமைச்சர் ராஜித தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகள் குறித்து இந்தியாவின் புதிய அரசுடன் பேச்சுவார்த்தைகள் தொடரும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே இணங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இந்தியாவின் புதிய அரசுடன் முன்னெடுக்கப்படும் என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தலில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் பேச்சுவார்த்தைகளை தொடர்வதென கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இரு மீனவர் சமூகங்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கப்பாடு எட்டப்படாவிட்டாலும், தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் என்றார். (2)

## பட்டமளிப்புவிழா ஆவணங்களை சமர்ப்பியுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா இவ் வருட இறுதியில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய 2013 ஆம் ஆண்டில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த தகைமை உடைய மாணவர்கள் அதற்கான ஆலயங்களை குறித்த நிறுவனத்தின் நிர்வாகம் பகுதியில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நிறுவனத்தின் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தமது ஆவணங்களை மேற்குறித்த காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தவறும் மாணவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)


# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## உலகமே கட்டுப்படும்



- உண்மையே பேசுங்கள். உண்மையைக் கைவிடச் செய்யும் தூண்டுதல்கள் குறுக்கிட்டாலும் பாதை தவறாதீர்கள்.
- எல்லா உயிர்களும் கடவுளின் அம்சஙளும. மனிதப்பிறவியே இதில் சிறந்தது.
- உங்களுக்குள் இருக்கும் தெய்வத்தன்மையை எங்கும் வெளிப்படுத்துங்கள்.
- நம்பிக்கையும்,நேர்மையும் இருக்கும்வரை ஒருவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது.
- பொறுமைமிக்கவனின் காலடியில் உலகமே கட்டுப்பட்டு நிற்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள மட்டுவில் கலைமகள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் த.சுதர்சன் மங்கள விளக்கேற்றுவதையும் மாணவர்கள் விளையாட்டு நிகழ்வில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- சாவகச்சேரி செய்தியாளர்)

# உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன்

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச் செய லக விளையாட்டுப் பிரிவு, யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்திய ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் ஆண்கள் பிரி வில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பி யனாகியது.

மேற்படி ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை தெல்லிப் பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணியும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரண்டு பாதியாட்டங்களிலும் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற் றுக்கொள்ளவில்லை. இதனால் வெற்றியா ளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு அடியில் நாடப்பட்டது. இதில் உடுவில் பிரதேச செயலக அணி 3:2 என்ற கோல்கள் கணக் கில் வெற்றிபெற்றது.

மேற்படி சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணத் தினைச் சேர்ந்த 15 பிரதேச செயலகங்களின் அணிகள் பங்குபற்றியிருந்தன. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வலி.தென்மேற்கு பி.செ. கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி; யங்கென்றிஸ், பிறைற் ஸ்ரார் இறுதிப் போட்டிக்கு தெரிவு

வலி தென்மேற்கு பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு போட்டிகளில் உதைபந்தாட்ட போட்டியின் அரை இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதியில் பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக்கழகமும்,இரண்டாவது அரை யிறுதியில் இளவாலை யங்கென்றிஸ் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் றெட் றெச்சகர் விளையாட்டுக்கழமும் மோதின.

இறுதிப் போட்டிக்கு யங்கென்றிஸ் விளை யாட்டுக்கழகமும் பிறைற் ஸ்ரார் விளை யாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளது.

இறுதிப்போட்டி இம்மாதம் 24 ஆம் திகதி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-23)



யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களுக்கிடையிலான 26 ஆவது இளைஞர் விளை யாட்டுப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. இதில் ஆண் , பெண் இருபாலாருக்கு மான கரம் போட்டிகள் கொக்குவில் மத்திய சனசமூக உள்ளக அரங்கில் இடம் பெற்றது. ஆண்களுக்கான திறந்த பிரிவுப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ஜே.விதுஷன் 2 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டார். யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சண்முக வடிவேல், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ரம்மியராகுலன், பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், ஆனைக்கோட்டை இளைஞர் கழகத்தலைவர் F.X.D.கூரே ஆகியோருடன் நிற்பதை படத்தில்

# யாழ்.மாவட்ட அணி தெரிவு

வடமத்திய மாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாவட்ட ங்களுக்கிடையிலான 12 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டப் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்டக் கழகங்களிலிருந்து 20 வீரர்களைத் தெரிவு செய்துள்ளதாக யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் எஸ்.விமலதாஸ் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள மாவட்டங்களின் துடுப்பாட்ட அணிகளுடன் விளையாடுவதற்கென 20 பேர் கொண்ட யாழ்.மாவட்டத் துடுப்பாட்ட அணி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேற்படி போட்டிகள் தம்புள்ளையில் எதிர்வரும் 31 மற்றும் ஜூன் முதலாம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதனடிப்படையில்,

எஸ்.வினோத் (மானிப்பாய் பரிஷ்),
பி.பத்மமயூரன் (பற்றீசியன்),
வி.விதுபாலா (பல்கலைக்கழகம்),
கே.உதயசபேசன் (ஸ்ரான்லி),
என்.காந்தசீலன் (கிறாஸ்கொப்பர்ஸ்),
ரி.செந்தூரன் (விக்டோரியா),
ஏ.எம்.நோபேர்ட் (பற்றீசியன்),
ஏ.வி.துசாந்த (ஜொனியன்ஸ்),
கே.சிலோஜன் (கொக்குவில் சி.சி.சி),
எஸ்.விஸ்ணுராம் (பல்கலைக்கழகம்),
ஏ.அன்புஜன் (ஜொனியன்ஸ்),
வி.மணிவண்ணன் (ஜொலிஸ்டார்ஸ்),
எம்.சந்திரகுமார் (ஜொலிஸ்டார்ஸ்),
டபிள்யு.சபேசன் (மானிப்பாய் பரிஷ்),
பி.நிதர்ஷன் (மானிப்பாய் பரிஷ்),
வி.வாமணன் (ஜொலிஸ்ரார்ஸ்),
ஏ.சஞ்சயன் (ஜொனியன்ஸ்),
எல்.ஆதித்தன் (கொக்குவில் சி.சி.சி),
எஸ்.தவீந்தன் (பல்கலைக்கழகம்),
பி.பிருந்தாபன் (ஜொனியன்ஸ்)

ஆகிய 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-23)





வவுனியா வசந்தன் குடியிருப்பு ஜெபாலய மிசன் சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களை...

பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவருமாகிய குணைஸ் பாருககை தொடர்பு கொண்டு கேட்டபோது, முசலி பிரதேசத்தில்முனனர் குடியிருந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் இடம்பெயர்ந்திருந்த காலத்தில் வசித்து வந்த பகுதி அரச அதிகாரிகளின் கடிதத்து டன் வருபவர்களை மீள்குடியேற்றம் செய்வது என்ற அபிவிருத்தி குழுவின் முடிவுக்கு அமைவாக இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில்இந்த நடைமுறைக்கு மாறாக, இந்தப் பிரதேசத்தில் சிங்கள குடும்பங்களைப் புதிதாகக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் ஒரு வருடத்திற்கு முன்பே மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தமக்கு முறையிடப்பட்டிருந்ததாகவும், அண்மையில் இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(செ-11)

# நீதி...

மே-18 துக்க நாள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் இச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிககப்படும் இத்தருணத்தில் எனது சிந்தனை தமிழ் மக்களாகிய உங்களைப் பற்றியதாகவே உள்ளது.

முள்ளிவாய்க்கால் அனர்த்தத்தின் பின் ஐந்து வருடங்கள் கழிந்தும் இன்னமும் தமிழ் மக்களுக்கு உரிய நீதியும், பொறுப்புக் கூறலும் கிடைக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அனைத்துலக விசாரணையின் பயனாக இதற்குரிய ஒரு பரிகாரம் தேடப்படும என நம்புகிறேன். இந்த விசாரணையின் மூலம தமிழ் மக்களுக்கு எதிரான சித்திரவதைகளையும் போர்க்குற்றங்களையும் கண்டறிய முடியுமென நம்புகிறேன்.

இந்த அனைத்துலக விசாரணை எதிர்காலத்தில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஒரு அத்திபாரமாக அமையும்.

இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றை தடுப்பதற்கு எந்தவித வழிமுறைகளும் அங்கு இருக்கவில்லை. இந்தச் சூழ்நிலை அங்கு ஒரு அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு பாதகமான நிலையை உருவாக்குகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக எதிர்வரும் கிழமைகளிலும் மாதங்களிலும் தொழிற்கட்சி தொடர்ந்தும் இன்றைய பிரித்தானிய அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு நாங்கள் தொடர்ந்தும் எங்கள் ஆதரவை வழங்குவோம்.

இந்தச்சந்தர்ப்பத்தில்உங்கள்எல்லோருக்கும் என்னுடைய ஆறுதல்களை கூறிக் கொள்வதோடு இலங்கைத் தீவில் உள்ள தமிழ் மக்களுக்கு உறுதியான வாழ்வு அமைவதற்கு உங்களுடன் சேர்ந்து பாடுபடுவேன் என மே-18 துக்க நாள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# நம்பிக்கை...

செயற்படுவது எதிர்காலத்தில் நடைபெறும் தேசிய தேர்தல் ஒன்றின் போது கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கு பெரும் பிரச்சினைகள் ஏற்பட காரணமாகி விடும் என அந்த கட்சியின் வேறு சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் ஆகியோர் கடந்த காலங்களில் போதைப் பொருள் தொடர்பில் அரசாங்கத்தை பகிரங்கமாக விமர்சித்த நிலையில், அவர்களுக்கு விவாதத்தை தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பலர் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில், விவாதத்தை தவிர்க்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேசிய தேர்தலே அவர்களின் இந்த முடிவுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவுள்ள இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான விவாதம் இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசியக் கூட்டணி மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார ஆகியோர் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர்.

எனினும் ஜே.வி.பி இதுவரை இது குறித்து எந்த கருத்துக்களை வெளியிடவில்லை.(செ-11)

# வடக்கின்...

ஆளும்கட்சி உறுப்பினர் எஸ்.பசுபதிப்பிள்ளை வடக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான அங்கவீனர்கள், குடும்பத்தலைவனையிழந்த பெண்கள் உள்ளனர். அவர்களின் நல்வாழ்வுக்கு இச்சபை ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட மூன்று பிரேரணைகளை முன்மொழிந்துள்ளார்.

மற்றுமொரு ஆளும்கட்சி உறுப்பினரான து.ரவிகரனால் மூன்று பிரேரணைகள் முன்மொழியப்பட்டுள்ளன- முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோதமாக இடம்பெற்று வரும் கருங்கல் அகழ்வு தடுத்து நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட மூன்று பிரேரணைகளை அவர் முன்மொழிந்துள்ளார்.

இதேவேளை வடமராட்சிப்பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மண்ணகழ்வு தடுத்துநிறுத்தப்படவேண்டும் என்று ஆளும் கட்சிஉறுப்பினரான எஸ்.சுகிர்தன் பிரேரணையொன்றினை முன்மொழிந்துள்ளார்.

இதனைவிட மன்னார் மாவட்டத்தில் இராணுவப்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் மீள அந்த மக்களிடம் ஒப்படைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தையும் பாதுகாப்பு அமைச்சினையும் இச்சபை கோரவேண்டுமென்பது உட்பட இரண்டு பிரேரணைகளை மற்றுமொரு ஆளும்கட்சி உறுப்பினரான அ.அஸ்மின் முன்மொழிந்துள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவரான சி.தவராசாவினால் பத்திரிகைச் செய்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரும் பிரேரணையொன்றும்முன்மொழியப்பட்டுள்ளது. இவ்வாறு 13 பிரேரணைகள் அடுத்து அமர்வின்போது விவாதிக்கவென முன்மொழியப்பட்டுள்ளது (செ-6)

# இசைப்பிரியாவின்...

சனல் 4 தொலைக்காட்சி ஏற்கெனவே இவ்வாறான பல புகைப்படங்களை வெளியிட்டுள்ள நிலையில் அவற்றின் உண்மைத் தன்மை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பு தொடர்ந்தும் ஆய்வுகளையும் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ள நிலையில், இந்த புகைப்படங்கள் தொடர்பிலும் அதில் கவனம் செலுத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டார்.

குறித்த தொலைக்காட்சியானது ஏற்கெனவே பல புகைப்படங்களை ஆதாரங்கள் இன்றி போலியாக முனைவைத்திருந்ததாகவும் அதன தொடர்ச்சியாக இதுவும் இருக்கும் என தாம் நம்புவதாகவும் விசாரணையின் இறுதியில் உண்மை வெளிச்சத்துக்கு வரும் எனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

போலி ஆவணத்தை கொண்டு இராணுவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வித மாக தொடர்ச்சியாக இவ்வாறான போலிபுகைப படங்கள் அவ்வப்போது வெளியிடப்படுவதாக குறிப்பிட்ட பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இவ்வாறான புகைப்படங்களின் உண்மைத் தன்மை குறித்து தொடர்ந்தும் சந்தேகம் நிலவுவதாக குறிப்பிட்டார்.

ஏற்கெனவே பாதுகாப்பு தரப்பு சனல் 4 வீடியோ ஆதாரங்களை விஷேட ஆய்வுக்கு உட்படுத்தியுள்ள நிலையில் அந்த ஆய்வினுள் இந்த புகைப்படங்கள் தொடர்பிலான விடயமும் உள்ளடங்கியிருக்கும் என தான் நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாக படையினரால் இசைப்பிரியா மீட்கப்பட்டு அழைத்து வருவது போன்ற காட்சிகளை சனல் 4 வெளியிட்டிருந்தது. எனினும் இறுதி யுத்தத்தின் போது படையினருடனான மோதலில் இசைப்பிரியா கொல்லப்பட்டத்தாக தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையிலேயே இசைப்பிரியா படையினரின் காவலரண் ஒன்றின் முன்னிலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புதிய புகைப்படங்கள் .வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இராணுவச்...

தியசாலையில் குறித்த இராணுவ சிப்பாயின் சடலத்தை பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முகமாலை இராணுவ முகாமிலிருந்து எழுதுமட்டுவாழிற்கு கடமைக்குச் சென்ற இவர் காணாமல் போயுள்ளார்.

இந்த நிலையில், நேற்று காலை இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-11)

# இசைப்பிரியாவுட...

இதில் இசைப்பிரியாவுடன் புகைப்படத்தில் உடனிருந்த பெண் மல்லாவியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவி என இனம் காணப்பட்டுள்ளார்.

1990-ம் ஆண்டு முதலாம் மாதம் 7-ம் திகதி மல்லாவியைச் சேர்ந்த தம்பதியினருக்கு மகளாக பிறந்த செல்வி குணலிங்கம் உசாலினி என்ற பாடசாலை மாணவியே 2009-ம் ஆண்டு இறுதியுத்த காலப்பகுதியில் முகாம் ஒன்றில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்துள்ளார்.

ஊடகங்களில் வெளியான மேற்படி புகைப்படத்தினை பார்வையிட்ட உசாலினியின் குடும்பத்தினர் மேற்படி தகவல்களை உறுதிப்படுத்தினர்.

இதேவேளை காணாமல் போன பிரஸ்தாப மாணவி தொடர்பில் அவர்களது உறவினர்களால் மனிதவுரிமை ஆணைக்குழு மற்றும் காணாமல் போனோரை தேடிக் கண்டறியும் குழு ஆகியவற்றில் முறைப்பாடுகள் முன்னரே பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-15)

## மரண அறிவித்தல்

### திருமதி கேதாரகுமார் தமிழினி

### (முன்பள்ளி ஆசிரியர்- துணுக்காய்)



A.P.C வீதி துணுக்காயைவசிப்பிடமாகக் கொண்ட திருமதி கேதாரகுமார் தமிழினி 18.05.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் ரகுநாதன் (துணுக்காய் பல நோ.கூ.சங்கம்)-சந்திரகலாவின் அன்பு மகளும் கேதாரகுமாரின் அன்பு மனைவியும் மதுஷன், தன்சியா ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தூரன், மிதுனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுமதி, யோகசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சத்தியானந்தம் பதூஷன்



புன்னாலைக்கட்டுவன் தெற்கு உண்டியலடியை பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியானந்தம் பதூஷன் (பதுக்குட்டி) 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் சத்தியானந்தம் (றஞ்சன்) சுதர்சினி (சுதா) தம்பதியினரின் பாசமிகு மகனும் மிதுசானியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சீனியர் மற்றும் பூமணி, மகேந்திரம் -திரவியபுஸ்பம் ஆகியோரின் பாசமிகு பேரனும் றஞ்சினி, சாந்தி, வனிதா, கவிதா, கிருபன் ஆகியோரின் மருமகனும் ஆனந்தன், ஈசன், ஞானேஸ்வரன், மைதிலி, மீரா, யசோ (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணிக்கு தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூராவத்தை, சுன்னாகம். (சி-7422)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ந்துறைப் படிப்பகம் ...சபை, யாழ்ப்பாணம்.



## ஈழ அகதிகள்...

யும். இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் ஏற்க முடியாது. காரணம் அகதிமுகாம் களிலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுவருகின்றன.

மேலும், இந்தியாவிற்கு அகதிகளாக சென்றவர்கள் அங்கு உயர் கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். அதேவேளை அவர்களுக்கு போதியளவு சலுகைகளும் வழங்கப்பட்டுவருகின்றன என்றார்.

இதேவேளை யுத்தத்திற்குப்பின்னர் யாழ். மாவட்டம்பொருளாதார ரீதியில் உயர் நிலை அடைந்துள்ளது. யுத்த நிறைவுக்குப் பின்னர் கடந்த 3வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத்தூதரக தூதுவராக கடமையாற்றி வருகின்றேன்.

எனினும் நான் இந்தியாவில் இருந்து யாழ்ப் பாணத்திற்கு வரும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டேன். எனக்கு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்வதற்கு 18 மணித்தியாலங்கள் எடுத்தன. எனினும் இன்று அவ்வாறில்லை 7 மணித்தியாலயங்களுக்குள் வந்து சேர முடியும் வீதி அபிவிருத்தி உசசநிலையில் உள்ளது.

மேலும் ரயில் போக்குவரத்து முடிவு நிலையை எட்டியுள்ளது. தொலைத்தொடர்பு வசதிகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

அத்துடன் மின்சார வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. பல்பொருள் வாணிபங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. எமக்கு வேண்டிய தேவைகளை யாழ்ப்பாணத்திலேயே நிறைவேற்றிக்கொள்ள முடியும். இவ்வாறு பல மாற்றங்கள்கடந்த ஆண்டுகளுக்குள் விரிவடைந்துள்ளன.

எனவேயுதத்திற்குப் பின்னர் யாழ்ப் பாணத்தில் பொருளாதாரம் உயர் நிலை பெற்றுள்ளது என்றார்.

யாழ்பாணத்திற்கு எதிர்வரும்யூன்மாதம யாழ்தேவி வரும்என எதிர்பார்க்கப்படுவதாகவும்,

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் அபிவிருத்திக்கான உதவித்திட்டங்களில் புகையிரதப் பாதை அமைப்பு இடம் பெற்றது.

அதன்டிவவுனியாவில் இருந்து யாழ்ப் பாணம் வரை ரயில் பாதை புனரமைக்கப்ட்டுதற்போதுபளை வரை போக்கு வரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மீதமாக உள்ள ரயில் பாதைகளும் புனரமைக்கப் பட்டு வருகின்றது. அதன்படி எதிர்வரும் யூன் மாதம் யாழ்ப் பாணத்திற்கு யாழ் தேவி வரும் என எதிர்பார்க்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## ரவிகர...

மேற்படி அறிவித்தலை அளிக்க வந்தவரிடம் நீதிமன்ற அழைப்பிற்கான காரணம் என்ன? என்று வினவிய நிலையில் அது தொடர்பில்தமக்கு அறிவிக்கவில்லை எனவும் மேற்படி அறிவித்தலை மாத்திரம் கொடுத்துவிடும் படி தெரிவித்ததாகவும் அறியமுடிகின்றது.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்காகவும் தாயகக்கனவோடு களமாடிய மாவீரர்களுக்காகவும் மக்களோடு சேர்ந்து இராணுவ அழுத்தங்களுக்குமுகங்கொடுத்து அவர்களின் தடுப்புகளை மீறி அக வணக்கம் செலுத்தி சோகங்களை அம்மக்களுடன் பகிர்ந்து இரண்டாம்நாள்ரவிகரனுக்கு வடுக் கப்பட்டிருக்கும நீதிமன்ற உத்தரவு அப்பகுதிவாழ் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (செ-6)


**போட்டிப் பரீட்சை**
**வழிகாட்டல் வகுப்புகள்**

இலங்கை சுங்கத் திணைக்களத்தின்
1. உதவி சுங்க அத்தியட்சகர்
2. சுங்கப் பரிசோதகர்
3. சுங்கக் காவலாளி

பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம். (6422)

'SUCCESS'
Mutivation Centre & Language Centre
11, Kasthuriyar Lane, Jaffna. 0776408622

**இதோ வந்துவிட்டது**
**வினாவிடை**

பொது நிதி முகாமைத்துவ நடைமுறைகள்-செ.நாகராஜா ஓய்வு நிலைக்கணக்காளர். யாழ். பூபால சிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். (6423)

CHARTERED @ K-AIMS
CAB I & CAB II
Classes are on progress
0773722104
147, 2/3, K.K.S. Road [Top of DFCC Bank] Jaffna
(C-7412)

**உடன் தேவை**

அச்சகம் ஒன்றிற்கு Photoshop, CorelDRAW, Page Maker, Typing (Tamil & English), Designing தெரிந்தவர்கள் தேவை. தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். யாழ்.மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. T.P. :- 077 791 7680

ஸ்ரீ மாருதி பிறிண்டேஸ்
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(கைலாச பிள்ளையார் கோவில் அருகில்) (6427)




Asian University for Women (Batch 2014)
B.A. inPPE (Politics - Philosophy and Economics)
பட்டம் பெறும் செல்வி மேகலா சபேஸ்வரன் அவர்களை வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர் :- சித்தப்பா - சசிதரன், சித்தி - அனந்தி
தங்கைகள் நல்விழி, எழில்விழி, கல்கி,
நண்பி - விஜிதா
(C-7423)

**பொருளியல்**
**புள்ளி விபரங்கள்**
A/L 2014, 2015 &
போட்டிப் பரீட்சைக்குரியது
வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை
ரூபாய் 90/- (6428)

**தற்போது அமோகமான விற்பனையில்**
ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கென் விசா
வெறும் 14 இலட்சங்களுடன்
100 % சட்ட ரீதியான பயண ஆலோசனை
இத்தாலி, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ்....
போன்ற நாடுகளுக்கான
விசா வெறும் 14 இலட்சங்களுடன்
இன்னும் 7 பேருக்கே அரியவாய்ப்பு!
7 நாள்களும் திறந்திருப்போம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(C-7410)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

- எமது கற்றை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

Jaffna Branch :
NO. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550

Vavuniya Branch :
NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel : 024 324 5287

Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074

Batch 1 : 21.05.2014
Batch 2 : 24.05.2014
Batch 3 : 26.05.2014
Batch 4 : 31.05.2014

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(C-7411)

**அரிய வாய்ப்பு**
கனடா 10 வாரங்களில்
3 படிமுறைகளில் விசா ஆலோசனை
4 பேருக்கு மட்டும்

கனடாவில் படிக்க உழைக்க சட்ட ஆலோசனை
முதல் 30 நாட்களுக்குள்- விண்ணப்பம் சமர்ப்பித்தலும், Skype நேர்முகத்தேர்வும்
அடுத்த 30 நாட்களுக்குள் - சட்ட அனுமதிப் பத்திரம்.
மீதி 12 தினங்களுள் - விசா பற்றிய முடிந்த முடிவு
விண்ணப்ப முடிவு - 22.05.2014

திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090
(C-7410)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.